
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 12, 2025

திங்கட்கிழமை 12, மே 2025 | ஒளி: 10 கதிர்: 236 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE





## கொத்மலையில் கோர விபத்து:

# 21 பேர் பலி

# 45 பேர் படுகாயம்



நுவரெலியா – கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டி எல்ல, பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில், 21 பேர் பலியானதுடன், 45 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பஸ் தலைகீழாக புரண்டதில், அதற்கு கீழே சிக்கிக் கொண்டவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமிக்கப்பட்டனர்.

அவ்வாறு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கதிர்காமத்திலிருந்து சனிக்கிழமை (10) இரவு 10 மணிக்குப் புறப்பட்டு, குருநாகல் நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸே, கொத்மலை, கெரண்டி எல்ல பகுதியில் சுமார் 100 அடி பள்ளத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) காலை 4.30 மணியளவில் விழுந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளதுடன், 25 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த பஸ், குருநாகலில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (11) இரவு 7.30 மணிக்கு, கதிர்காமத்தை நோக்கி புறப்படவிருந்தது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதில் இரண்டு சிறுவர்கள் அடங்குவதாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் மகேந்திர செனவீரட்ன தெரிவித்துள்ளார்.

பஸ்ஸ6க்குள் பலரும் சிக்கியிருந்த நிலையில், அவர்களில் சிலர் உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டவர்கள், வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் பேருந்து சாரதியும் அடங்குவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து இடம்பெற்ற போது, அந்த பஸ்ஸில், 75 பேர் பயணித்துள்ளனர்.

விபத்து குறித்து விசாரணை நடத்தி வரும் கொத்மலை பொலிஸார், ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் ஏற்பட்ட திடீர் தொழில்நுட்பக் கோளாறே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

விபத்துக்கு உள்ளான பஸ், இலங்கை இராணுவத்தினர், பொலிஸாரின் உதவியுடன் பாரிய கிரைன் கொண்டு, பள்ளத்திலிருந்து ஞாயிற்றுக்கிழமை (11) மாலையே மீட்கப்பட்டது.

(ரஞ்சித் ராஜபக்ஷ, எஸ்.கௌசல்யா, எஸ்.சுஜித்தா, எஸ்.சதீஸ்)


## ஒரு மில்லியன் ரூபாய் நிதியுதவி

கொத்மலை கெரண்டியெல்ல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(11) அதிகாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் உயிரிழந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒரு மில்லியன் ரூபாய் வழங்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி நிதியத்திற்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

அதன்படி, இறந்தவரின் உறவினர்களுக்கு இந்தப் பணத்தை உடனடியாக வழங்க ஜனாதிபதி நிதியம் திட்டமிட்டுள்ளது.

மேலும், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் காப்புறுதி நிதியம் மூலம் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி இரங்கல்



நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டியெல்ல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) காலை நடந்த பஸ் விபத்து பற்றிய செய்தியைக் கேட்டு நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன் என தெரிவித்துள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 12 பேரை மீட்டேன்: காயமடைந்த பயணி



நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில் கொத்மலை, கெரண்டி எல்ல, பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சிக்கிக் கொண்டவர்களில் 12 பேரை மீட்டேன் என அந்த பஸ் விபத்தில் சிக்கி, காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஆண் பயணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வேட்பாளர்களின் கவனத்துக்கு

நடந்து முடிந்த 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும், தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரகாரம், தங்கள் பிரசார வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### அரச ஊழியர்களுக்கான

## கடன் வரம்பு அதிகரிப்பு



அரச ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்படும் இடர் காலக் கடன், 250,000 ரூபாவிலிருந்து 400,000 ரூபாய் வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தொடர் சிக்கலில் கெஹெலிய



விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வசம் பல அங்கீகரிக்கப்படாத பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2


### மாகாண சபைத் தேர்தலை விரைவில்

## “அரசாங்கம் நடத்தாது”



மாகாண சபைத் தேர்தலை வெகு விரைவில் அரசாங்கம் நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்தை அரசாங்கம் தற்போது எடுக்காது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## தனி நாடு கேட்கிறது பலுசிஸ்தான்

பாகிஸ்தானின் மிகப்பெரிய மாகாணமாக பலுசிஸ்தான் உள்ளது. ஆனால், பாகிஸ்தான் அரசு தங்களைப் புறக்கணிப்பதாகவும், பலூச் பகுதியை தனி நாடாக அறிவிக்கக் கோரியும் அங்குள்ள பலூச் விடுதலைப் படையினர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், பலூச் மக்களும் தங்கள் பங்குக்கு பாகிஸ்தானுக்கு எதிராக அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தொடர்ச்சி P2



## கூட்டு அர்ப்பணிப்பு

### பாதுகாப்பு அமைச்சு நன்றி

பிரியாவிடை அணிவகுப்பு ஒத்திகையின் போது, 09ஆம் திகதியன்று மாதுறுஓயா சிறப்புப்படை முகாமில் இடம்பெற்ற பெல் 212 ரக ஹெலிகொப்டர் விபத்தைத் தொடர்ந்து, மேற்கொள்ளப்பட்ட மீட்பு பணிகளுக்கு உதவிய பிரதேச மக்கள், அரலகன்வில பிரதேச வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை வைத்தியசாலையின் மருத்துவ நிபுணர்கள், பணியாளர்கள், தீயணைப்பு மற்றும் அம்புலன்ஸ் சேவை பணியாளர்களுக்கு பாதுகாப்பு அமைச்சு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ச்சி P2

## ‘பெல் 412’ ஹெலிகள் உஷார்




கொத்மலை கரண்டியெல்ல பகுதியில், ஞாயிற்றுக்கிழமை (11) வெலிமடயில் சனிக்கிழமை(10) நடந்த விபத்துக்களில் படுகாயமடைந்தவர்களை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்ல இரண்டு ஹெலிகாப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளரின் உத்தரவுகளைப் பின்பற்றி, இலங்கை விமானப்படை ரத்மலானை விமானப்படை தளத்தில் ஹெலிகாப்டர்களை நிறுத்தியுள்ளது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# கொத்மலையில் கோர விபத்து:

# 21 பேர் பலி



# 45 பேர் படுகாயம்

## ஜனாதிபதி இரங்கல்

நாட்டில் தினமும் அதிகரித்து வரும் வீதி விபத்துகள் குறித்து அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கான நிரந்தர திட்டத்தை வகுப்பதற்கு அரசாங்கம் தற்போது மும்முரமாக செயல்பட்டு வருகிறது.

தற்போதுள்ள சட்டங்களை செயல்படுத்துவதன் மூலமும், சாரதிகளின் மனப்பான்மையை மேம்படுத்துவதன் மூலமும் இவ்வாறான விபத்துகளைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை நடந்த இந்த கொடூரமான வீதி விபத்தில் உயிரிழந்த அனைவரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திக்கிறேன்.

காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளியளிப்பதற்காக சகல தொடர்புடைய மருத்துவமனைகளையும் தயார்ப்படுத்தவும், இது தொடர்பாகத் தேவையான அனைத்து எதிர்கால நடவடிக்கைகளையும் எடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கும் சுகாதாரத் துறைகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## 12 பேரை மீட்டேன்: காயமடைந்த பயணி

இராணுவத்தில் பணியாற்றும் இந்த பயணி, விடுமுறையை முடித்துக்கொண்டு முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த போதே இவ்வனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார்.

பஸ் சற்று வேகமாக வந்தது. அவ்விடத்தில் திடீரென பிரேக் அடிக்கப்பட்டது. அப்போது பஸ், இடது புறத்தில் புரண்டு விழுந்து விபத்துக்கு உள்ளானது. நான், மயங்கி விட்டேன், எனினும், ஓரிரு நிமிடங்களில் மயக்கம் தெளிந்தது. கடுமையாகப் பாதிக்காதவர்களை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு, ஏனையவர்களை மீட்டேன், மூன்று அல்லது நான்கு சின்ன பிள்ளைகளையும் மீட்டேன்.மொத்தமாக 12 பேரை மீட்டேன் என்றார்.

## 'பெல் 412' ஹெலிகள் உஷார்

இந்த அவசர மருத்துவ வெளியேற்றங்களுக்காக இரண்டு பெல் 412 ஹெலிகாப்டர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

## கூட்டு அர்ப்பணிப்பு

## பாதுகாப்பு அமைச்சு நன்றி

இந்த சோககரமான சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி மீட்பு மற்றும் மருத்துவ சேவையை உறுதி செய்வதில் சம்பந்தப்பட்ட அனைவரின் விரைவான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி முக்கிய பங்கு வகித்தது. மாதுருஓயா மக்களின் அர்ப்பணிப்பு மிக்க ஆதரவை அமைச்சு விசேடமாக பாராட்டுகிறது, அவர்களின் உடனடி மற்றும் தன்னலமற்ற உதவிகள் ஆயுதப்படைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான ஆழமான ஒற்றுமை உணர்வை எடுத்துக்காட்டுகின்றன மேலும் இராணுவ வீரர்களுக்கும் சிவில் சமூகத்திற்கும் இடையிலான சிறந்த உறவையும் கோடிட்டுக் காட்டுகிறது. அத்துடன் உயிர்களைப் பாதுகாப்பதற்கும் தேசிய பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்கும் வழங்கப்பட்ட அர்ப்பணிப்பையும் வலுப்படுத்துகிறது.

அத்துடன் இந்த அமைச்சு, பொலன்னறுவை வைத்தியசாலையின் மருத்துவ ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்முறைத்தன்மையை பாராட்டுவதுடன், அவசரகால நடவடிக்கைகளின் போது அவர்களின் நிபுணத்துவம் காயமடைந்தவர்களுக்கு அவசியமான உடனடி சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்தது. அவசரகால தீயணைப்பு மற்றும் அம்புலன்ஸ் சேவைகளின் பணிகளும் பாராட்டத்தக்கவை, அவர்களின் விரைவான தலையீடு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை நன்கு ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்துதல் ஆகியவை அவசரநிலையை திறம்பட நிர்வகிப்பதில் முக்கிய பங்கு வகித்தன.

மீட்பு நடவடிக்கையில் பங்களித்த அனைவரின் கூட்டு அர்ப்பணிப்புக்கும் பாதுகாப்பு அமைச்சு, மற்றும் முப்படையினர் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களின் சேவை , ஒற்றுமை மற்றும் தன்னலமற்ற அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கது என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கை விமான படைக்குச் சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டர் மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து சனிக்கிழமை (10) விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தின் போது ஹெலிகொப்டரில் இருந்த 2 விமானிகள் உட்பட 12 பேர் மீட்கப்பட்டு அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பொலன்னறுவை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அவர்களில், இரண்டு (Air Gunners) வான்வழி துப்பாக்கி வீரர்கள் மற்றும் நான்கு இராணுவ விசேட படை வீரர்கள் உட்பட 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனி நாடு கேட்கிறது பலுசிஸ்தான்

சமீபத்தில் 12 பாகிஸ்தான் ராணுவத்தினர் சென்ற வாகனத்தை வெடி வைத்துத் தகர்த்தனர். பலூச் மாகாண தலைநகர் குவெட்டாவை கைப்பற்றி விட்டதாகவும் பலூச் விடுதலைப் படை அமைப்பினர் அறிவித்துவிட்டனர்.

அங்குள்ள பிரபல எழுத்தாளர் மிர் யார் பலூச் கூறும் போது, "பாகிஸ்தானில் இருந்து பலுசிஸ்தான் தனி நாடாகி விட்டது. இதற்கான அறிவிப்பு விரைவில் வரும். புதிய அரசிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படும். எனவே, டெல்லியில் பலுசிஸ்தான் தூதரகத்தைத் தொடங்க அனுமதிக்க வேண்டும். ஐ.நா. பலுசிஸ்தானுக்கு அமைதிப் படையை அனுப்ப வேண்டும். தனி நாடாக பலுசிஸ்தானை அங்கீகரிக்க வேண்டும்" என்று பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முஸ்லிம் நாடாக இருந்தாலும், அதன் பலூசிஸ்தானில் இந்துக்களும் சிறுபான்மையினராக இருக்கின்றனர். பாகிஸ்தான் மக்கள் தொகையில் 6 சதவீதம் மக்கள் பலூச் பகுதியில் உள்ளனர். ஆனால், நிலப்பரப்பு மட்டும் 45 சதவீதம். அந்தளவுக்கு மிகப்பெரிய மாகாணம். தனிமங்கள் கொட்டிக் கிடக்கும் இடம். இந்துக்களுக்கு பலுசிஸ்தானுக்கும் உள்ள தொடர்பை இங்குள்ள ஹிங்குலாஜ் அம்மன் கோயில்தான் உறுதி செய்கிறது. இந்தியாவின் 54 சக்தி பீடங்களில் ஹிங்குலாஜ் கோயிலும் ஒன்று.

ஹிங்குலி என்பதற்கு சிந்தி மொழியில் முன் நெற்றிப் பொட்டு அல்லது குங்குமம் என்று அர்த்தம். பாகிஸ்தானுக்கு எதிரான தாக்குதலுக்கு 'சிந்தூர்' என்று பிரதமர் மோடி பெயர் வைத்துள்ளது மிகப் பொருத்தமாக இருப்பதை அறிய முடியும். இங்குள்ள அம்மனுக்கு செந்தூரத்தில்தான் அலங்காரம் செய்கின்றனர். இந்த கோயிலும் குகையில்தான் அமைந்துள்ளது. பலுசிஸ்தானின் லயரி தாசில் மலைப் பகுதியில் கோயில் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் அந்த மலைப் பகுதியில் உள்ள கோயிலுக்குப் இந்துக்கள் ஆண்டுதோறும் புனித யாத்திரையும் மேற்கொள்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் ஒரு லட்சம் இந்துக்கள் இந்தக் கோயிலுக்கு புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். இந்த கோயிலை ஹிங்லாஜ் தேவி, ஹிங்குலா தேவி மற்றும் நானி மந்திர் கோயில் என்று மக்கள் அழைக்கின்றனர்.

பாகிஸ்தான் அரசின் புறக்கணிப்பு, சீனாவின் கட்டுமானப் பணிகளால் பாதிப்பு போன்றவற்றால் விரக்தியில் உள்ள பலுசிஸ்தான் மக்கள், தங்களை தனி நாடாக அறிவிக்கக் கோரி போராடி வருகின்றனர். இந்தியா மீதும் இந்திய மக்கள் மீதும் பலூச் மக்கள் வைத்திருக்கும் அந்த நம்பிக்கை நிறைவேறுமா என்பதற்கு காலம் பதில் சொல்லும்.

## நடிகை சேமினி கைது

நிதி மோசடி வழக்குகள் தொடர்பான ஏழு நிலுவையில் உள்ள பிடியாணைகள் தொடர்பாக, இலங்கை நடிகை சேமினி இடமல்கொட, ஞாயிற்றுக்கிழமை (11) அன்று வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்ட அமலாக்க நிறுவனங்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளைத் தொடர்ந்து இடமல்கொட கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த பிடியாணைகள் நிதி முறைகேடு தொடர்பான பல குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவையாகும்.



## வேட்பாளர்களின் கவனத்துக்கு

வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளிடம் தங்கள் தகவல்களைத் தாக்கல் செய்ய வேண்டும்.

தேர்தல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கூறியுள்ளார்.

### அரச ஊழியர்களுக்கான

## கடன் வரம்பு அதிகரிப்பு



இதற்கமைய 250,000 ரூபாவாக இருந்த அரச ஊழியர்களின் இடர் காலக் கடன் தொகை 4 இலட்சம் ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு அமைவாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதுடன், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

## தொடர் சிக்கலில் கெஹெலிய

மீட்கப்பட்ட பொருட்களில் ஒரு யானை முத்து, பல மரப்பட்டை துண்டுகள் மற்றும் ஒரு சிறிய பொறிக்கப்பட்ட புத்தர் சிலை ஆகியவை அடங்குவதாக சிறைச்சாலை உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து விசாரித்தபோது, ரம்புக்வெல்ல அந்தப் பொருட்களைத் தனது தந்தை தனக்குக் கொடுத்ததாகவும், தனது பாதுகாப்பிற்காக அவற்றை எடுத்துச் சென்றதாகவும் கூறியுள்ளார்.

பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு, மேலதிக விசாரணைக்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட உள்ளன.

இலஞ்ச குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### மாகாண சபைத் தேர்தலை விரைவில்

## "அரசாங்கம் நடத்தாது"



மக்கள் மத்தியில் செயற்பாட்டு ரீதியாலான அரசியலில் ஈடுபடுங்கள். மக்களுடனான நெருங்கிய தொடர்பு தான் அரசியல் இருப்பினை பலப்படுத்தும். மக்களின் அடிப்படை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி பலமான எதிர்க்கட்சியாக செயற்படுங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

சமகால அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைவரம் குறித்து இதன்போது ஆராயப்பட்டது. நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் எழுச்சிப் பெற்றுள்ளமை பெற்றுள்ளமை தொடர்பில் பேசப்பட்டுள்ளது. கட்சியின் எழுச்சிக்காகத் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாராட்டியுள்ளார்.

மக்கள் மத்தியில் செயற்பாட்டு ரீதியாலான அரசியலில் ஈடுபடுங்கள். மக்களுடனான நெருங்கிய தொடர்பு தான் அரசியல் இருப்பினை பலப்படுத்தும். மக்களின் அடிப்படை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி பலமான எதிர்க்கட்சியாக செயற்படுங்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு வலியுறுத்தியுள்ளார். மாகாண சபைத் தேர்தலை இந்த அரசாங்கம் வெகுவிரைவில் நடத்தும் என்று எதிர்பார்க்க முடியாது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு எதிர்மறையானதாக உள்ளதால் பிறிதொரு தேர்தலை நடத்தும் தீர்மானத்துக்கு அரசாங்கம் தற்போது வராது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து தெரிவித்துள்ள பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ பொதுமக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கம் உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்கவில்லை. தேசிய பாதுகாப்பு முழுமையாக பலவீனமடைந்துள்ளது.

கடந்த 7 மாத காலத்துக்குள் 79 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளை சுட்டிக்காட்டும் பலமான எதிரணியாக செயற்பட வேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

# “அரச தலைவர்களுக்கு பிரச்சினையை ஒத்தி வைப்பதே சிறந்த தீர்வு”

நூருல் ஹுதா உமர்



“மீனவர்களின் பிரச்சினைகள் தீர்க்க ஆர்ப்பாட்டம் செய்வதை விட அரச தலைவர்களுக்குப் பிரச்சினையை ஒத்தி வைப்பதே சிறந்த தீர்வு. தமது பிரச்சினைகள் சில தினங்களில் தீராது போனால் மீனவர்கள் வீதிக்கு இறங்கப் போவதாக அறிவித்துள்ளார்கள். அதற்கான சூழ்நிலை உருவாகாது ஜனாதிபதி, மீன்பிடி அமைச்சர் போன்றோருக்கு இந்த பிரச்சினைகளை ஒத்தி வைத்துத் தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பேன். மீனவனின் பிள்ளையான எனக்கு மீனவர்களின் பிரச்சனையைப் பற்றி யாரும் விளங்கப்படுத்தத் தேவையில்லை” என தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாபா தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர்கள் இணைந்து சாய்ந்தமருதில் சனிக்கிழமை(10) அன்று நடத்திய மீன் திருட்டை ஒழிப்பது தொடர்பாக ஒன்று கூடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், “கடந்த காலங்களில் இருந்த அரசியல்வாதிகள் ஒலுவில் துறைமுகம் பற்றியோ, மீனவர்களின் பிரச்சினைகள் பற்றியோ எங்கும் பேசவில்லை. மீனவர்களுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க முன்வரவில்லை. நான் பல வருடங்களாக பல்வேறு தரப்பினர்களையும் அணுகி மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க பல்வேறு முயற்சிகளைச் செய்து கொண்டு தான் இருக்கிறேன். நாங்கள் ஜே.வி.பியை இங்கு அறிமுகம் செய்த போது யாரும் எங்களை ஆதரிக்கவில்லை. ஆனால், மீனவர்கள் இம்முறை என்னுடன் சேர்ந்து வெற்றிக்காக உழைத்தார்கள். ஆனபோதிலும் நான் தோல்வி அடைந்தேன். கொள்கைகளை மாற்றி ஜனாதிபதி என்னைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார் என்றார்.

## மண்வெட்டி கணையால் தாக்கப்பட்டு ஒருவர் பலி

சுஜிதா

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை கூம்வூட் தோட்டத்தில் ஆண் ஒருவர் சடலமாக ஞாயிற்றுக்கிழமை(11) காலை மீட்கப்பட்டுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 53 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தைக் கண்ட பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கமைய சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சனிக்கிழமை (10) இரவு குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகக் குறித்த நபர் அவரது மைத்துனர் ஒருவரால் வீட்டிலிருந்த மண்வெட்டி கணையால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். பின்னர் உறவினர்களால் சடலம் வேறொரு இடத்தில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## செம்பு கம்பி, கேபிள்களுடன் இருவர் கைது

மன்னார் - ஜிம்ரோ நகர்ப் பகுதியில் செம்பு கம்பி மற்றும் தொலைபேசி கேபிள்களுடன் இருவர் சனிக்கிழமை(10) அன்று கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 19 வயதுடையவர்கள் என்று விசாரணையில் தெரிய வந்தது.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையக் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது 2 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 17 கிலோ 200 கிராம் செம்பு கம்பி மற்றும் தொலைபேசி கேபிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை மாவட்ட குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி உ.பொ.ப. மதுரங்க அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண தமிழ் பேசி நடித்தமை

# “மகிழ்ச்சியை தந்துள்ளது”




யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் குறும்படத்தில், யாழ்ப்பாணத்திற்கு வந்து, யாழ்ப்பாண தமிழ் பேசி நடித்தமை மகிழ்ச்சியை தந்துள்ளது என தென்னிந்திய திரையுலக பிரபல நடிகர் எம். எஸ் பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்டு வரும் ‘கர்மா’ எனும் குறும்படத்தில் நடிப்பதற்காகக் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்த எம்.எஸ்.பாஸ்கர், யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து 42 கடல் மைல் தூரத்தில் உள்ள வேதாரணியம் அருகில் உள்ள முத்துப்பேட்டை எனும் ஊரே எனது ஊர். எங்கள் ஊருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் நிறையத் தொடர்புகள் இருக்கிறது. வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் எமது ஊரில் வசித்துள்ளார்.

எனது அப்பாவுக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் நிறையத் தொடர்புகள் இருந்தன. எங்கள் வீட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் வந்து தங்கி நின்றுள்ளார்கள்.

எனது ஊரை ஒற்ற, கலாசாரம், உணவு பழக்கவழக்கம் தான் இங்கே காணப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உணவகங்களில் உணவருந்தாமல், பட உருவாக்கக் குழுவினரின் வீட்டில் உணவருந்தியமையால், எங்கள் வீட்டுச் சுவையுடன் உணவருந்தியது போன்று இருந்தது.

அது மட்டுமின்றி, இங்குள்ளவர்கள் தமிழ் மொழி பேசுவதால், வேறு நாட்டில் இருக்கும் எண்ணம் இல்லாமல் எங்கள் ஊரில் இருப்பது போன்றே இருந்தது.

யாழ்ப்பாண பேச்சு வழக்கு மொழியில் பேசி நடித்து இருக்கிறேன். ஒரு குழந்தை எவ்வாறு பேசக் கற்றுக்கொண்டு பேசும் போது, ஏற்படும் சந்தோசம் போன்று யாழ்ப்பாண பேச்சு வழக்கைக் கேட்டு அவ்வாறே பேசும் போது, நிறையச் சந்தோசமாக இருந்தது. இந்த வயது முதிர்ந்த குழந்தை நன்றாகவே யாழ்ப்பாண பேச்சு வழக்கைப் பேசி இருக்கிறது என நம்புகிறேன்.

படப்பிடிப்புக்காக வந்துள்ளமையால், என்னால் பல இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்க்க முடியவில்லை, விரைவில் எனது குடும்பத்துடன் யாழ்ப்பாணம் மீண்டும் வந்து யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்க்கும் எண்ணம் உள்ளது.

ஈழத்தின் கதைகளைத் தென்னிந்தியத் திரைப்படங்கள் போதுமானதாக எடுத்துச் செல்கிறது என இங்குள்ளவர்கள் நினைத்தால், அந்த இயக்குநர்களைப் பாராட்டுங்கள்.

போதுமானதாக இல்லாமல் இருந்தால் அந்த இயக்குநர்களுக்கு உங்கள் சமூக வலைத்தளங்கள் மூலமாக எடுத்துக் கூறுங்கள் அதன் ஊடாக ஈழ கதைகளைத் திறமையாக எடுத்துச் செல்லச் சொல்லுங்கள் என்றார்.

## கார் விபத்தில் மூவர் காயம்

ரஞ்சித் ராஜபக்ஷ

வெல்லம்பிட்டியவிலிருந்து நுவரெலியா நோக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பயணித்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளத்தாக்கில் கவிழ்ந்துள்ளதாக வட்டாவாளைத் தலைமை பொலிஸ் பரிசோதகர் சந்தன கமகே தெரிவித்தார்.

இந்த விபத்து ஹட்டன்-கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை-கரோலினா எஸ்டேட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (11) இடம்பெற்றுள்ளதுடன் விபத்தில் காயமடைந்த மூவர் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்தின் போது தாய், தந்தை, மகள் மற்றும் மகளின் இரண்டு குழந்தைகள் காரில் பயணம் செய்ததாகவும், விபத்தில் இரண்டு குழந்தைகளுக்குக் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.



மேலும், காரை மகள் செலுத்தி வந்ததாகவும், எதிர்த் திசையிலிருந்து வந்த பேருந்துக்கு வழிவிட முயன்ற போது, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சுமார் 20 அடி பள்ளத்தில் விழுந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

## 4 இலட்சம் சிகரெட்டுகளுடன் நால்வர் கைது

சுமார் 600 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய, வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வந்த நால்வர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் வெல்லம்பிட்டி, தெமட்டகொட, பம்பலப்பிட்டி மற்றும் கொஸ்வத்த பகுதிகளைச் சேர்ந்த 25 - 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் விமான நிலையத்தை விட்டு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில், தனித்தனியாக, வெளியேற முயன்ற போதிலும், சுங்க அதிகாரிகள் அவர்களின் முயற்சிகளை முறியடித்து, 20 சூட்கேஸ்களில் வைத்திருந்த 4 இலட்சம்



வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுகள் அடங்கிய 2,000 அட்டைப்பெட்டிகள் சிகரெட்டுகளைப் பறிமுதல் செய்தனர்.

## மதுபோதையில் பேருந்தை செலுத்திய சாரதி கைது

பண்டாரகம, கலனிகம பகுதியில் மதுபோதையில், பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டதாக பாணந்துறை போக்குவரத்து பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறையில் - ஹொரணை தனியார் பேருந்தின் சாரதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை போக்குவரத்து பொலிஸார் கலனிகம சந்திப்பில் தமது பணியில் ஈடுபட்டிருந்தபோது, ஹொரணையிலிருந்து வந்து கவனக்குறைவாகப் பல வாகனங்களை முந்திக்கொண்டு எதிர்த் திசையில் பயணித்த பேருந்தை நிறுத்தி, சாரதியை அழைத்தபோது அவர் மது போதையில் இருந்தமை தெரியவந்துள்ளது.

இதன்போது 40க்கும் மேற்பட்ட பயணிகள் பேருந்தில் இருந்ததாகவும் இந்த நிலைமை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர்களை வேறு பேருந்தில் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தீ விபத்தில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

கொஸ்லந்த, மீரியபெத்த பகுதியில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (11) அன்று இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான 66 வயதுடைய அழகன் கந்தையா என அடையாளம் காணப்பட்டுள்ளார். சம்பவத்தின் போது, குறித்த நபர் வீட்டில் தனியாக இருந்ததாகவும், வீட்டினுள் ஏற்பட்ட தீயில் சிக்கிய பின்னர் அவர் தீயுடன் வீட்டிலிருந்து வெளியே வந்து விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் சமையலறையிலிருந்து ஒரு காலி பெட்ரோல் கேன் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “நல்ல உலகை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்”



இன்றைய அல்பா தலைமுறை மாணவர்கள் பாடசாலைகளில் வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் என்ற பாடத்தின் ஊடாக சமூக மயமாக்கப்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பாடசாலைகள் வெறும் கல்விக்கூடங்கள் மட்டுமல்ல, அவை சமூகத்தின் கண்கள். இங்குதான் ஒரு குழந்தை சமூக உறவுகளைப் புரிந்து கொள்ளவும், பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளவும், நல்ல குடிமகனாக வாழ தேவையான அடித்தளத்தையும் பெறுகிறது.

குறிப்பாக, அல்பா தலைமுறையைப் பொறுத்தவரை, தொழில்நுட்பம் அவர்களின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் இந்த காலகட்டத்தில், நேரடி சமூக இடைவினைகள் குறைந்து வருகின்றன. இந்நிலையில், பாடசாலைகளில் வழங்கப்படும் ‘வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்’ என்ற பாடம் அவர்களின் சமூக மயமாக்கல் பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக திகழ்கிறது.

இந்தப் பாடத்திட்டம் மாணவர்களுக்கு வெறும் புத்தக அறிவை மட்டும் போதிப்பதில்லை. மாறாக, வாழ்க்கையின் நடைமுறைச் சவால்களை எதிர்கொள்ளவும், பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் கற்றுக்கொடுக்கிறது. குழுவாக இணைந்து செயல்படுதல், ஒருவருக்கொருவர் மதித்தல், கருத்து வேறுபாடுகளை ஆரோக்கியமான முறையில் கையாளுதல் போன்ற சமூக திறன்கள் இங்கு வளர்க்கப்படுகின்றன.

நாம் உலகிற்கு வழங்கக்கூடிய விலைமதிப்பற்ற மிகவும் மதிப்புமிக்க சொத்து தூய தேரவாத தர்மமாகும். அதற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல், மகா சங்கத்தை அறிவால் வளர்த்தல், சங்க சாசனத்தின் நிலைத்தன்மை மற்றும் தொடர்ச்சிக்கான நமது பொறுப்பு மற்றும் கடமையைக் கைவிடக் கூடாத பணி என்பதை நாம் உறுதியாகப் புரிந்துகொள்ள வேண்டும். புத்தரின் பரிநிர்வாணத்திலிருந்து இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் கடந்த இந்த தருணத்தில், உலகெங்கிலும் உள்ள பௌத்தர்கள் வெசாக் தினத்தைக் கொண்டாடுவது அவரது தர்மத்தின் சிறப்பை உணர்ந்திருப்பதால்தான். புத்தர் தனது இறுதி படுக்கையில் கூறியதும் எனக்கு பிறகு சிம்மத்தை குருவாகக் கொண்டு செயல்படுமாறு தான்.

இந்த வெசாக் தினத்தில் நமது உறுதிமொழியும் அந்த உயர்ந்த நோக்கத்தின்படி, தர்மத்தை குருவாகக் கொண்டு நல்ல உலகை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அது வெறுப்பற்ற, அன்பால் நிறைந்த உலகிற்கான பாதையை திறக்கும்.

உங்கள் அனைவருக்கும் வெசாக் நல்வாழ்த்துக்கள். அனைவருக்கும் மும்மணிகளின் ஆசி கிடைக்கட்டும்! என்றார்.




## அம்ஷிகாவுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

எம்.எஸ்.எம்.நூர்தீன்

பாலியல் துஷ்பிரயோகத்தினால் தற்கொலை செய்து கொண்ட டில்ஷி அம்ஷிகாவிற்கான நீதி கோரி மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப் பூங்காவுக்கு முன்னால் ஞாயிற்றுக்கிழமை(11) அன்று கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலுள்ள பொது அமைப்புக்கள் சிவில் சமூக அமைப்புக்கள் பெண்கள் அமைப்புகள் இணைந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, ஆசிரியர் ஒருவரினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாகி தற்கொலை செய்து கொண்ட மாணவி அம்ஷிகாவிற்கான நீதி கோரி கோரிக்கை விடுக்கப்பட்டதுடன் மெழுகு வத்தியை சுடரேற்றி, மாணவிக்கு நீதி கோரிய பதாகைகள் சுலோகங்களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, சிவில் சமூக பிரதிநிதிகள் பெண் சமூக செயற்பாட்டாளர்கள் சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## வெலிமடை விபத்தில் ஒருவர் பலி

வெலிமடை, டயரபா பகுதியில் சனிக்கிழமை (10) இரவு தனியார் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த 20க்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளையில் இருந்து வெலிமடை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.



# காணிக்கை கொள்கையில் ஆன்மீக புதையல்

இன்று வெசாக் தினம், இந்தியாவில் இருந்து தோன்றி உலகம் முழுவதையும் தர்மத்தால் ஒளிரச் செய்த புத்தரின் பிறப்பு, ஞானம் பெற்ற மற்றும் மறைவு ஆகிய மூன்று நிகழ்வுகளும் நிகழ்ந்த நாளாக இது அங்கீகரிக்கப்படுகிறது.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆசீர்வதிக்கப்பட்ட கௌதமர் நிர்வாணம் அடைந்த போது, அவரது முகத்தில் தோன்றிய மெல்லிய புன்னகையால் பூமி நடுங்கி நடுங்கியது என்று கூறப்படுகிறது. ஒரு புத்தர் அரிதாகவே புன்னகைக்கிறார். அது ஒரு மெல்லிய புன்னகை, அது கண்ணுக்குத் தெரியவில்லை. இந்த சின்ன சிரிப்பு பூமியையே அதிர வைக்கிறது. அந்த ஆற்றல் அவ்வளவு சக்தி வாய்ந்தது.

ஒரு புத்தரின் புன்னகை அவர் உணர்ந்த தர்மத்தின் சக்தியைக் குறிக்கிறது. புத்தர்கள் ஒருபோதும் அழுவதில்லை. எந்தவொரு குறிப்பிட்ட விடயத்திற்காகவும் புத்தர்களுக்கு எந்த குறிப்பிட்ட மகிழ்ச்சியோ அல்லது சோகமோ ஏற்படுவதில்லை. ஆனால், நிர்வாணத்தை உணரும் தருணம் என்பது மில்லியன் கணக்கான யுகங்களுக்கு ஒரு முறை வரும் ஒரு சிறப்பு வாய்ப்பாகும்.

இந்த தருணம் மிகவும் நுட்பமான, கிட்டத்தட்டக் கண்ணுக்குத் தெரியாத புன்னகையுடன் ஒரு புத்தர் மூலம் வெளிப்படுகிறது. இலங்கை அதன் கிராமப்புற காட்டு மாநில வடிவத்திலிருந்து மீண்டு, நவீன, முற்போக்கான நாடாக மாறி வருகிறது. நவீன அறிவியல் இருக்கும் இடத்தில் புத்த மதமும் இருக்கிறது. இதற்குக் காரணம், பௌத்தம் ஒரு மதம் அல்ல, அது ஒரு தத்துவம். இந்தப் படிசோதகமணி தர்மம் உங்களை எதையும் செய்யக் கட்டாயப்படுத்துவதில்லை.

நன்மையை விரும்புபவர்கள் நன்மை செய்ய சுதந்திரமாக இருக்கிறார்கள், தீமையை விரும்புபவர்கள் தீமை செய்ய சுதந்திரமாக இருக்கிறார்கள். ஆனால், ஆசீர்வதிக்கப்பட்ட கௌதமர் தொடர்ந்து நன்மையை மட்டுமே பிரசங்கித்தார். ஏதாவது கெட்டதைச் செய்யக்கூடாது என்று தோன்றுகிறது. புத்தரிடமும் தர்மத்திலும் அடைக்கலம் புகுந்து எந்தப் பாவியும் நல்ல மனிதனாகும் வாய்ப்பை ஆசீர்வதிக்கப்பட்ட கௌதமர் வழங்கியுள்ளார்.

புத்தரின் உடலில் கற்களை எறிந்து இரத்தம் வழியச் செய்த துறவி தேவதத்தன் கூட, கடைசி நேரத்தில் புத்தரிடம் தஞ்சம் புகுந்து தனது எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொண்டார். தேவதத்த துறவியைப் படுக்கையில் சுமந்து செல்லும்போது, அவர் அதிலிருந்து இறங்கி நடக்க முயன்றார், இதனால் பூமி இரண்டாகப் பிளந்து அவர் நரகத்தில் இழுத்துச் செல்லப்பட்டார். ஆனால், கடைசி நேரத்தில், அவர் புத்தரிடம் தஞ்சம் புகுந்ததால், புத்தர் ஒரு நாள் பூமியில் புத்தராக மாறுவார் என்று பிரசங்கித்தார்.

ஆயுள் முழுவதும் தன்னலமற்ற பக்தி செயல்கள் மூலம் புரிந்து கொள்ளப்பட்ட தர்மம், உலகில் வசிக்கும் அனைத்து மக்களின் ஆன்மீக நல்வாழ்விற்கும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. மதச் சூழலுக்குள் மனிதனின் ஆன்மீக வளர்ச்சியை வளர்ப்பதே புத்த பெருமானின் முக்கிய செய்தியாகும். மேலும், ஒரு ஆட்சியாளர் நல்ல ஆட்சியை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதையும் பௌத்த தத்துவம் குறிப்பிடுகிறது.

புத்த மதம் ஒரு ஆன்மீக புதையல். இந்தக் காரணத்தினால்தான், பௌத்தத்தில் மிகவும் பொருத்தமான காணிக்கை கொள்கைகளை வழங்குவதாக நாங்கள் உணர்கிறோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# உள்ளூராட்சி கணக்குகள் பிழைத்தன?

**லக்ஸ்மன்**

ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு புதியவர்களையும் நம்பி ஏமாறும் மக்கள், தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று வித்தியாசப்படுவதில்லை என்பது கடந்த ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களில் வெளிப்பட்டிருந்தது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலின் மூலம் ஏமாற்றத்தைச் சீர்செய்வதற்கான தேர்தலாக வெளிப்பட்டிருக்கிறது. அதற்கான வாய்ப்பு அவ்வளவுக்கு அவசரமாக வழங்கப்பட்டது ஒருவகையில் நல்லதே. அதாவது, ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை கொள்ளும் மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படாமையின் வெளிப்பாடுதான் அது. அந்த ஒழுங்கில்தான், ஆளும் கட்சியாக இருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சித் தேர்தல் வீழ்ச்சியை நாம் அணுகமுடியும். தேசிய மக்கள் சக்திக்குப் பெரு நகரங்களில் ஓரளவுக்கு வெற்றி கிடைத்திருந்தாலும், கிராமப்புறங்களில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தேசிய மக்கள் சக்தி கடந்த தேர்தல்களில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமை காரணமாக இருக்கலாம்.

இலஞ்சம் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தல் தண்டனை வழங்குதல் கடந்த ஆறு மாதங்களில் சரியாக நடைபெறவில்லை. 2019 ஈஸ்டர் தாக்குதல்தாரிகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை. தேர்தல் வாக்குறுதிகளில் இருந்து பொருள்களின் விலைக் குறைப்பு நடைபெறவில்லை. இவை தேசிய மக்கள் சக்தியின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும். ஆனால், வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்குப் பெரும்பான்மைகள் கிடைக்காமைக்குப் பல காரணங்களைச் சொல்லமுடிந்தாலும் எதிர்க்கட்சிகள் பலமாற்றிருப்பது தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட அளவான ஆசனங்கள் கிடைத்தமைக்கு காரணமாகும்.

வடக்கு, கிழக்கு போலவே தேசிய ரீதியில் தேசிய மக்கள் சக்தி சரியான முறையில் தோற்கடிக்கப்படாமைக்கு எதிர்க்கட்சிகள் தங்களை முன்னேற்றாது தங்களது தவறுகளைச் சீர்தூக்கிப் பார்க்காதிருக்கின்றமை காரணமாகும்.

தமிழ் மக்கள் தங்கள் உரிமை சார்ந்தும் இலங்கையின் இனப்பிரச்சினை சார்ந்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர சிறந்த தீர்வைத் தருவார் என்றே நம்பியிருந்தனர். காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினை, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீக்கம் என அது நீளும்.

இவ்வாறுதான், உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பகுப்பாய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கடந்த வார உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நாடு முழுவதும் பிரசாரம் செய்து, வியட்நாமுக்கு அவசரமாகச் சென்று பின்னர் ஒரு சிறப்பு விமானத்தில் திரும்பிய பிறகு மிகவும் சோர்வான ஒரு நிலையை எட்டினார் என்றுதான் செல்ல வேண்டும்.

இந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மிகுந்த முயற்சியையும் நேரத்தையும் செலவிட்டது. ஆனால், ஒருவேளை பிரதேசங்களிலும், மாகாணத்திலும் தேசிய ரீதியிலும் மிக முக்கியமான சபைகளை இழக்க நேரிடும் என்று அது நினைத்திருக்கவில்லை. ஊழல் காரணமாக நிகழ்ந்த நாட்டின் ஆட்சி மாற்றம் தொடர்ந்தும் மேலும் வலுப்பெற்றதாக அமையும் என்றே நம்பியிருந்தனர். ஆனால், அது முழுமையாக நடைபெறவில்லை என்பது தான் உண்மை.

> **தேசிய மக்கள் சக்தியின் வெற்றி தலதா மாளிகை கண்காட்சி நிகழ்வு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நடைபெற்ற பிள்ளையானின் கைது போன்றவற்றினாலும், தேசபந்து தென்னக்கோனின் மீதான விசாரணை ஆணைக்குழு நியமனமும் என சில விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன**

பிரதமர் ஹரிணி, மேற்கொண்ட பிரசாரங்கள் வெற்றியளிக்கவில்லை. அமைச்சர்களின் தீவிர பிரசாரங்கள் பெரிதாகப் பலனளிக்கவில்லை. கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் கருத்துக்கள் எடுபடவில்லை என்பதை தங்களுக்குள்ளும், தங்கள் நண்பர்களுடனும் மிகவும் அமைதியாகப் பேசுவதற்கான சூழல் உருவாகியிருக்கிறது. இதுவும் உண்மைதான்.

இந்த உண்மைகளை உற்று நோக்கும்போது, தேசிய மக்கள் சக்தி கொண்டிருந்த நம்பிக்கை வலுவிழந்தே போயிருக்கிறது. இந்த வலுவிழத்தல் மாகாண சபை தேர்தல் இலக்கில் மாற்றத்தினைக் கொண்டுவரலாம். நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்திருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் வெற்றி பெற்றவர்களின் நடத்தைகள் வெளியே வரத் தொடங்கி இருக்கின்றன. பாதகமான விமர்சனங்கள் அதிகரித்திருக்கின்றன. இந்தப் பாதகமான விமர்சனங்கள் எதிர்வரும் காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவில் வீழ்ச்சியையே ஏற்படுத்தப் போகின்றது என்பது மாத்திரமே நிச்சயமானது.

தேசிய மக்கள் சக்தி 200க்கும் அதிகமான சபைகளில் வெற்றிகளைப் பெற்றிருக்கின்றது என்று சொன்னாலும் அவற்றில் முழுமையாக ஆட்சியை அமைத்துக் கொள்வதற்கான வாய்ப்பற்றே இருக்கிறது. ரில்வின் சில்வா மக்களால் நிராகரிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளோடு, இணைந்து ஆட்சிகளை அமைக்கப்போவதில்லை என்ற கருத்து அவர்களின் இயலாமையையே வெளிக்காட்டுகிறது. இவ்வாறான கருத்துக்கள் அவர்களின் கவனக்குறைவே வெளிப்படுத்துகின்றன எனலாம்.

தேர்தல் முடிவுகளின் படி, தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மையாகவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரண்டாவது நிலையிலும் காணப்படுகின்றனர். கடந்த முறை உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுக் கொண்ட வெற்றியோடு ஒப்புநோக்கும் போது தேசிய மக்கள் சக்தியின் வெற்றி ஒன்றுமில்லை என்றே சொல்லமுடியும்.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றி தலதா மாளிகை கண்காட்சி நிகழ்வு, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நடைபெற்ற பிள்ளையானின் கைது போன்றவற்றினாலும், தேசபந்து தென்னக்கோனின் மீதான விசாரணை ஆணைக்குழு நியமனமும் என சில விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன. அவற்றில் பிள்ளையானின் கைது கிழக்கில் பிள்ளையானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அதிகரித்ததைத் தவிர, ஏனையவை இரண்டுமே சிங்கள பிரதேசங்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவை அதிகரித்து இருக்கின்றன என்றும் கொள்ள முடியும்.

இருந்தாலும், தேசிய மக்கள் சக்தி தங்களது நிலைப்பாடுகள், வாக்குறுதிகளின் காரணமாகத் தோல்வியையே தழுவியிருக்கிறது. இது எதிர்கால அதிகாரத்துக்கான ஆபத்தான நிலை என்றே சொல்ல முடியும்.

அனைத்துக் கட்சிகளின் மீது மக்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கை மற்றும் ஆதரவுடன் ஒப்பிடுகையில், அதே நேரத்தில், கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய நிலைக்கே தேசிய மக்கள் சக்தியைத் தள்ளி விட்டிருக்கிறது. அத்துடன், ஏனைய கட்சிகளும் இதனைச் சிந்திக்கச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறக் கூடாது என்பதும் நினைவில் இருத்தப்பட வேண்டும். இருப்பினும், மூன்று வீதத்திலிருந்து உயர்வுக்குச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் வாக்கு ஆறு மாதங்களில் பதினெட்டு சதவீதம் குறைந்துள்ளது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

இதற்கு பல காரணங்கள் உள்ளன. ஜனாதிபதித் தேர்தலில், பாராளுமன்றத் தேர்தலில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதனால், மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் புதிய ஆட்சியை ஏற்றிருந்தனர். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டில் பொருளாதாரம் உட்பட மிகப்பெரிய மாற்றங்களைச் செய்வார்கள் என்றே மக்கள் நம்பி இருந்தனர். ஜனாதிபதியாகி இடைக்கால அரசாங்கத்தை நிறுவிய கையோடு பாராளுமன்றத்தைக் கலைத்த வேகம் நாட்டு மக்களுக்கான நலன்களின் மீதும் காணப்படும் என்றே மக்கள் நம்பினர்.
ஆனால், அது நடைபெறவில்லை.

> **மக்களின் எதிர்பார்ப்பாக இருந்த பொருள்களின் விலைக் குறைப்பு, மின்சார, நீர் கட்டணக் குறைப்பு நடைபெறவில்லை. போததற்கு உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியாக இல்லாவிட்டால் அபிவிருத்திகள் குறித்து ஆராய்வோம் என்ற விதமான கருத்துக்கள் மக்களைச் சிந்திக்க வைத்தன என்றே சொல்ல வேண்டும்**

ஆட்சியைப் பெரும்பான்மையுடன் அமைத்ததன் பின்னர், அவை நடைபெறுமா? என்பதற்கான பதிலாக நிருவாகத்தின் மீதும், அதிகாரிகள் மீதும் குறைகளைக் கண்டுபிடிப்பதாகவும் அவற்றின் மீது அதிகாரம் பிரயோகிப்பதுமாகவே இருந்தது. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சம்பள அதிகரிப்பு என்ற பெருமெடுப்பு வரவு-செலவுத் திட்டத்தில் புஸ்வானமாகது, அதே போன்றே மக்களின் எதிர்பார்ப்பாக இருந்த பொருள்களின் விலைக் குறைப்பு, மின்சார, நீர் கட்டணக் குறைப்பு நடைபெறவில்லை. போததற்கு உள்ளூராட்சித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியாக இல்லாவிட்டால் அபிவிருத்திகள் குறித்து ஆராய்வோம் என்ற விதமான கருத்துக்கள் மக்களைச் சிந்திக்க வைத்தன என்றே சொல்ல வேண்டும்.

அந்த வகையில்தான், தான் தப்பித்துக் கொள்வதற்காக காவல்துறைமீதும், அதிகாரிகள் மீது பந்தை உதைத்து விடும் உத்தியைக் கையாண்ட அரசாங்கம் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்களால் உதறி விடப்பட்டிருக்கிறார்கள் என்பதே முடிவாகும்.

இந்த முடிவு அடுத்து நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலிலும் பாதிப்புச் செலுத்தும் என்பதே கணக்காக இருக்கும் என்பதிலும் மாற்றுக் கருத்தைக் காண்பிக்காது என்பதும் நிச்சயம். இதனை சீர் செய்வதே இனி நடைபெறும் என்று நம்புவோம். இதற்குள் தங்கள் ஆதரவை எதிர்க்கட்சிகளும் வலுப்படுத்திக் கொள்ளும்.



## வாழ்வியல் தரிசனம்

எதிரிகளுடன் ஒருபோதும் கடும் போக்குடன் நடந்துகொள்ளக் கூடாது. எதிரிகளுடனும் கூட, நாம் இணங்கிப் போகக் கூடிய குணாம்சங்கள் இருக்கும். அந்தக் குணாம்சங்களின் ஊடாக நாம் எதிரிகளுடன் பழகுவது வாழ்க்கையில் நிம்மதி பெருகத் தடை இருக்காது. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்ப்பது அவசியமில்லை. பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது, வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன், எவரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்த தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்காது, பணிவுடன் பேசுவதே, நிரந்தர வெற்றிக்கு வழி!

மனிதனுடன் மட்டுமல்ல, மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களையும் பாசத்துடன் நோக்கினால், அவை உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள், அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம், கோபம் போன்ற துர்க்குணங்கள் தனது, குடும்பம், அயலட்டை, கிராமம், தேசம் என்பவற்றின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததை செய்வதே மேன்மை.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### நடைபாதையை பயன்படுத்தும் ஓட்டுனர்கள்

ஹட்டன் நகர வீதியில் பாதசாரிகள், பயன்படுத்தும் நடைபாதையில் சில நபர்கள் மோட்டார் சைக்கிள்களில் பயணிக்க முயற்சிப்பதால், பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

சட்டத்தை மீறி இவ்வாறு நடைபாதைகளில் வாகனம் ஓட்ட நடவடிக்கை எடுப்பதால், விபத்துகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்தி, நடைபாதையைப் பயன்படுத்தும் ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், இவ்வாறு செயற்படுவதைத் தவிர்க்குமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எச்.எம்.சுதத் ஹேவா




# இலங்கையின் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி, அமெரிக்காவை தளமாகக் கொண்ட குளோபல் ஃபினான்ஸ் சஞ்சிகையினால், மீண்டும் 'இலங்கையின் சிறந்த வங்கியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த விருதை வங்கிக்கு 23ஆவது தடவையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குளோபல் ஃபினான்ஸின் 'உலகின் சிறந்த வங்கிகள் 2025' பட்டியலில் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 28 நாடுகள் உட்பட கிட்டத்தட்ட 150 நாடுகளில் உள்ள நிதியியல் நிறுவனங்கள் அடங்குகின்ற நிலையில். அவற்றில் சிறந்த வங்கிகள் இந்த சஞ்சிகையினால் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளன.

குளோபல் ஃபினான்ஸ் சஞ்சிகையின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் சிறந்த வங்கிகள் தொடர்பான 2025 பதிப்பில், இலங்கையில் கொமர்ஷல் வங்கியுடன் அந்தந்த நாடுகளில் சிறந்த வங்கிகளாகத் தெரிவு செய்யப்பட்ட முன்னணி வங்கிகளான CBA (அவுஸ்திரேலியா), China Construction வங்கி (சீனா), HSBC (ஹொங்கொங்), ANZ (நியூசிலாந்து), DBS (சிங்கப்பூர்), SMBC (ஜப்பான்), ஸ்டேட் பாங்க் ஓஃப் இந்தியா (இந்தியா), City Bank (பங்களாதேஷ்) மற்றும் CTBC (தைவான்) ஆகியன இடம்பெற்றுள்ளன.

'முடிவடைந்த நிதியாண்டானது, கொமர்ஷல் வங்கிக்கு இணையற்ற மைல்கற்கள் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் வெற்றியைக் கொண்டதாகும். நாம் எதிர்நோக்கியுள்ள கடன் மறுசீரமைப்பு உட்பட மற்றும் பிற சமூக அரசியல் சவால்களின் மத்தியில் இந்த சாதனையை நாம் ஈட்டியுள்ளோம். மேலும் குறிப்பிடத்தக்க வகையில் வங்கியானது வெற்றிகரமான உரிமைகள் பத்திர வெளியீட்டின் மூலம் 22.54 பில்லியன் ரூபாயை திரட்டியதுடன், ஒரு சிறந்த கடன் பத்திர வெளியீட்டை முகாமைத்துவம் செய்த நிலையில் விதிவிலக்கான நிதியியல் மீளெழுச்சி மற்றும் சந்தை நம்பகத்தன்மையை வெளிப்படுத்தியது. அதேவேளை மேலும் 115 சர்வதேச மற்றும் உள்நாட்டு விருதுகளை வென்றது. இந்நிலையில் நிலைபெறுதற்குத் தன்மை, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் முயற்சிகளில் புதிய தளத்தை உருவாக்கியது. எனவே, இலங்கையின் சிறந்த வங்கியாக எமது வங்கியானது மீண்டும் ஒருமுறை முடிசூட்டப்பட்டதில் ஆச்சரியமில்லை.' என வங்கியின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

ஒக்டோபர் 18, 2025 அன்று வொஷிங்டன் டிசியில் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதிய (IMF)/ உலக வங்கியின் வருடாந்த கூட்டத்தின்போது இடம்பெறவுள்ள விருது வழங்கும் விழாவில் குளோபல் ஃபினான்ஸினால் தெரிவு செய்யப்பட்ட சிறந்த வங்கிகள் கௌரவிக்கப்படவுள்ளன.

சுவசெரிய அறக்கட்டளைக்கு

# HNBஇடமிருந்து இரு அம்பியூலன்ஸ்கள்

1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவைக்கு உதவும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட 'அம்பியூலன்ஸை தத்தெடுப்பு' (Adopt an Ambulance) திட்டத்திற்கு பங்களிப்புச் செய்யும் வகையில், ஹட்டன் நஷனல் வங்கி (HNB) இரண்டு அம்பியூலன்ஸ்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. இந்த முயற்சியானது நாடு முழுவதும் அவசர மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதற்கும், இலவச மருத்துவமனைக்கு முந்தைய சிகிச்சை சேவைகளை வழங்குவதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றுவதற்கான அணுகலை அதிகரிப்பதற்கான HNB இன் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது.




இந்த அம்பியூலன்ஸ்களை அதிகாரப்பூர்வமாக கையளிப்பதற்காக நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி தமித் பல்லேவத்த, HNBஇன் சிரேஷ்ட நிர்வாக துணைத் தலைவர்/தலைமை செயல்பாட்டு அதிகாரி சஞ்சய் விஜேமான்ன, சிரேஷ்ட துணைத் தலைவர் - உத்திசார் பிரியங்கா விஜயரட்ன, நிலைபேறாண்மை வணிக நிர்வாக அதிகாரி ஷானெல் பெரேரா மற்றும் 1990 சுவசெரிய அறக்கட்டளையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சொஹான் டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் HNBஇன் முகாமைத்துவப் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி தமித் பல்லேவத்த உரையாற்றுகையில், 'அவசர நிலையில் விரைவான மருத்துவ உதவிகளை வழங்குவதன் மூலம் உயிர்களைக் காப்பாற்ற முடியும். 'அம்பியூலன்ஸை தத்தெடுக்க' திட்டத்தின் மூலம் இலங்கையின் அவசர மருத்துவமனை சேவைகளை வலுப்படுத்த பங்களிக்க முடிந்ததில் நாங்கள் பெருமைப்படுகிறோம். நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு உதவுவதற்கும், அவசர சிகிச்சை போன்ற முக்கியமான பொதுச் சேவைகளுக்கு ஆதரவளிப்பதற்குமான எங்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது காட்டுகிறது' என்றார்.

1990 சுவசெரிய அறக்கட்டளையின் பிரதம நிறைவேற்று அதிகாரி சொஹான் டி சில்வா, HNB வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், இந்த அம்பியூலன்ஸ் சேவைகளை பராமரிப்பதற்கு நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்றார்.


'HNB போன்ற நிறுவனங்களின் ஆதரவு எமது அவசர மருத்துவமனை சேவைகளை மேம்படுத்தவும், விரிவுபடுத்தவும் உதவுகிறது. இந்த நன்கொடைக்கு நன்றி. அனைத்து இலங்கையர்களுக்கும் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு இலவச மருத்துவ உதவி வழங்க முடியும் என்பதை உறுதி செய்கிறோம். இந்த இரண்டு புதிய அம்பியூலன்ஸ்கள் விரைவாக நோயாளிகளை சென்றடைவதற்கும், அவசர நிலைகளுக்கு சிறப்பாக பதிலளிப்பதற்கும் எங்களுக்கு உதவும்,' என்று அவர் மேலும் கூறினார்.

அவசர மருத்துவமனை சிகிச்சை சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை, நாடு முழுவதும் உள்ள நோயாளிகளுக்கு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு விரைவான மற்றும் இலவச அவசர மருத்துவ சிகிச்சை வழங்கி, ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவுகிறது. HNB இன் இந்த நன்கொடையின் மூலம் 1990 சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை இப்போது மேலும் நோயாளிகளை விரைவாக அடைவதற்கும், அவசர நிலைகளில் விரைவான மற்றும் சிறந்த மருத்துவ சேவையை வழங்கவும் முடியும்.

'அம்பியூலன்ஸை தத்தெடுப்பு' திட்டத்திற்கு HNBஇன் பங்களிப்பு, பொது சுகாதாரம் மற்றும் சுகவாழ்வு மீது கவனம் செலுத்தும் வங்கியின் பரந்த நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாகும். பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், இலங்கை மக்களுக்கு நீண்டகால நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டங்களுக்கு HNB தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

# சமூகத்தின் திறவு கோலாக குடியியற் கல்வி

**விவேகானந்தன் திலுக்சனா,**
நான்காம் ஆண்டு
கல்வியியல் சிறப்பு கற்கை மாணவி,
கல்வி பிள்ளை நலதுறை,
கிழக்கு பல்கலைகழகம்.



புதிய தலைமுறை விடியல்களின் கையில் எதிர்காலத்தின் கனவுகள் தவழ்கின்றன. தொழில்நுட்பத்தின் விரல் நுனியில் உலகம் சுருங்கிவிட்ட இந்த யுகத்தில், சமூக உறவுகளின் பாலங்கள் சற்று தளர்ந்திருக்கின்றன.

இந்நிலையில், பாடசாலைகள் வெறும் 'ஏட்டுச்சுரைக்காய்' களஞ்சியங்களாக மட்டும் இல்லாமல், சமூக மயமாக்கலின் உயிரோட்டமுள்ள களங்களாக உருமாற வேண்டியது காலத்தின் கட்டாயம். இங்குதான், குடியியற் கல்வி' என்ற வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்' என்ற பாடம் ஒரு மந்திரக் கோலாக உருவெடுத்து மாணவர்களின் சமூகப் பயணத்திற்கு ஒளி சேர்க்கிறது.

ஒரு சிற்பி தனது உளியால் கல்லைச் செதுக்கி அழகான உருவத்தை உருவாக்குவது போல, இந்தப் பாடம் மாணவர்களின் உள்ளார்ந்த சமூக திறன்களை மெருகேற்றி, அவர்களைச் சிறந்த குடிமக்களாகவும், சமூகத்தின் பங்களிப்பாளர்களாகவும் மாற்றுகிறது.

சமூக மயமாக்கல் என்பது மனிதர்களின் சமூகத்தில் வாழ்வதற்கான வழிமுறைகள், மதிப்புக்கள், நெறிமுறைகள் மற்றும் செயல்முறைகளை கற்றுக் கொள்ளும் செயல்முறை ஆகும்.

வாழ்க்கை தேர்ச்சி மற்றும் குடியுரிமை கல்வி பாடம் இலங்கை கலைத்திட்டத்தில் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் பாடம் மாணவர்களுக்கு சமுதாயத்தில் ஒரு நல்ல குடிமகனாக எவ்வாறு பங்களிப்பு செய்ய முடியும் என்பதை கற்றுக் கொடுக்கின்றது.

இதில் வாழ்க்கை தேர்ச்சி (life skills) மற்றும் குடியியல் கல்வி (civic) ஆகிய பிரதான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் வாழ்க்கை தேர்ச்சி என்பது தனிப்பட்ட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிப்பது எச்சரிக்கை, நேர்மை மன உறுதிப்பாடு போன்ற திறன்களை வளர்த்தல் ஆகும் குடியியல் கல்வி என்பது மாணவர்களுக்கு சமூகத்தில் நல்லகுடியார்களாகவும் அரசியல் சட்டங்கள் மனித உரிமைகள் போன்றவற்றைப் புரிந்து கொள்வதற்கான கல்வி ஆகும்

இன்றைய இலங்கையில் குடியியல் பாடம் ஊடாக மாணவர்கள் எவ்வாறு சமூக மயமாக்கப்படுகின்றனர். என்பதை நாம் நுணுக்கமாக ஆராய்ந்தால் இலங்கை கலைத்திட்டத்தில் மாணவர்களை சமூக மயமாக்குவதில் குடியியல் பாடம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது மாணவர்களுக்குத் தனது நாட்டின் அரசியல் அமைப்பு, மக்கள் உரிமைகள் சட்டங்கள், அரசியல் கட்சிகள், அரசாங்க செயல்பாடுகள் மற்றும் மக்கள் சேவைகள் பற்றிய விளக்கத்தை வழங்குகின்றது.

மேலும் இது சார்ந்த தகவல்களை ஆராயும் போது கலை சார்ந்த விடயங்களை மாணவர்களுக்கு வழங்குகின்ற ஒரு பிரதான பாடமாக இக் குடியியல் பாடம் விளங்குகின்றது. உதாரணமாக இப்பாடம் ஊடாக ஒரு மாணவன் கலாசாரம், மதம் இனம், மொழி ஆற்றலை விருத்தி செய்கின்றான்.

அதாவது தனது கலாசாரம் மட்டும் அல்லாமல், ஏனைய கலாசாரங்களைப் புரிந்து கொள்ளும் புரிந்துணர்வும் ஒரு தனி மனிதனிடம் விருத்தி செய்ய இந்த வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் பாடம் முக்கிய பங்காற்றுகின்றது. என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. மேலும், இது போன்று ஏனைய மதங்கள் ஏனைய இனங்கள் எமது நாட்டில் காணப்படும் மொழி போன்றவற்றில் மனிதன் மதித்து நடப்பதற்கு இச் சமூகவியல் பாடங்களில் ஒன்றான வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் பாடம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் பாடம் மாணவர்களின் சமூக மாற்றத்திற்கான பிரதான வழிகாட்டியாக செயல்படுகின்றதா? என நோக்கினால் அதாவது ஒரு தனி மனிதன் மாறும் போது அச்சமுகம் மாறுபடும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

எனவே, ஒரு மனிதன் மாறும் போது நன்னடத்தைகளுடன் வாழும் போது அச்சமுகம் மொத்த கூட்டாகச் சேர்ந்து மாறுவதற்கான பிரதான பங்களிப்பை இவ்வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் பாடம் வழங்குகிறது. இப்பாடம் ஊடாக சமூக ஒருங்கிணை புரிந்துகொண்டு உரிமைகள் மற்றும் பொறுப்புக்களை உணர்ந்து சமூகத்தில் சிறந்த குடிமகனாக வாழ ஒருவன் பயிற்றுவிக்கப்படுகின்றான்.

அதனால் தான் இன்று இலங்கை பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்களுக்கு இப்பாடம் கட்டாயமான பாடமாகவும் கா.பொ.த சாதாரண தர வகுப்பில் தொகுதி பாடமாகவும் கட்டாயமாகப்பட்டுள்ளது.

ஜோன் டேவி என்ற அறிஞரால் 1916ஆம் ஆண்டு democracy and education; என்ற புத்தகத்தில் வாழ்க்கை தேர்ச்சி மற்றும் குடியுரிமை கல்வி பொது ஒழுங்கு கொள்கையின் அடிப்படையில் சமூக மாற்றங்களை உருவாக்குவதற்கான பயிற்சி என கூறப்பட்டுள்ளது.

Jean Piaget என்பவரால் 1947ஆம் ஆண்டு குழந்தை அறிவியலில் வளர்ச்சியும் அவர்களின் சமூக மயமாக்களும் என்ற ஆய்வில் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு அறிவியல் மற்றும் வாழ்க்கை தேர்ச்சி அறிவும் முக்கியமானது எனக் கூறப்பட்டுள்ளது.

John என்ற அறிஞரால் 2015ஆம் ஆண்டு The role of civic education in promoting citizenship என்ற ஆய்வில் சமூக நெறிமுறைகள் மற்றும் குடியுரிமை பற்றிய கல்வி மாணவர்களை சமூக சமூகத்தில் நற்பண்புகளை கற்றுக் கொடுத்து அதிகமான பொறுப்பான உறுப்பினர்களாக உருவாக்க உதவுகின்றது என கூறப்பட்டுள்ளது

தற்காலத்தில் வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் பாடம் மாணவர்களை சமூக மயமாக்குகின்றதா? என்று வினாவுக்கு விடையளிக்கும் பாங்கோடு பார்ப்போமானால் அதாவது இன்றைய காலத்தில் இப்பாடம் மாணவர்களுக்கு சமூக மயமாக்கப்படும் ஒரு பெரும் பங்களிப்பு செய்கின்றது

> **பாடசாலைகளில் நிகழும் இந்த சமூக மயமாக்கல் செயல்பாடு வெறும் நிகழ்வல்ல, அது ஒரு சமூக மாற்றத்திற்கான விதை என்பதை உணர்ந்து செயல்படுவோம்**

என்பதை நாம் ஏற்றுக் கொள்வதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை அவைகளாக சமூக ஒழுக்கத்தைப் போதிக்கின்றது. அதாவது, ஒரு மாணவன் ஒழுக்கம் மற்றும் விழுமிய சார்ந்த விடயங்களை முதன்முதலாக கற்கும் இடம் குடும்பத்திற்கு அடுத்த கட்டமாகப் பாடசாலையில் ஆகும்.

இப் பாடசாலையானது இப் பாடத்துறை ஊடாக மாணவனுக்கு ஒரு சிறந்த ஒழுக்கத்தை வழங்குகின்றது. காரணம் இப் பாடப்பரப்பில் உள்ளடக்கப்பட்ட பெரும்பாலான பாடங்கள் மற்றும் பயிற்சிகள் எமது அன்றாட வாழ்வைப் பிரதிபலிப்பவையாகவும் ஒழுக்கத்தைப் போதிக்கும் விடயங்களாகுமே காணப்படுவது ஒரு முக்கிய விடயமாகும்.

மேலும், சமூக அங்கீகாரம் மற்றும் கலாசார உணர்வை ஏற்படுத்துகின்றது. நேர்மறையான குடிமகனை உருவாக்க வழிகாட்டுகின்றது. அதுமட்டும் அல்லாமல், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, அரசியல் அறிவு மற்றும் சமூக நலன் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் திறன் போன்றவை இச் சமூக மயமாக்கல் பாடம் ஊடாக பாடசாலைகளில் வழங்கப்படுகின்றது.

இன்றைய அல்பா தலைமுறை மாணவர்கள் பாடசாலைகளில் வாழ்க்கை தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் என்ற பாடத்தின் ஊடாக சமூக மயமாக்கப்படுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. பாடசாலைகள் வெறும் கல்விக்கூடங்கள் மட்டுமல்ல, அவை சமூகத்தின் கண்கள். இங்குதான் ஒரு குழந்தை சமூக உறவுகளைப் புரிந்து கொள்ளவும், பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளவும், நல்ல குடிமகனாக வாழத் தேவையான அடித்தளத்தையும் பெறுகிறது.

குறிப்பாக, அல்பா தலைமுறையைப் பொறுத்தவரை, தொழில்நுட்பம் அவர்களின் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் இந்த காலகட்டத்தில், நேரடி சமூக இடை வினைகள் குறைந்து வருகின்றன. இந்நிலையில், பாடசாலைகளில் வழங்கப்படும் 'வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்' என்ற பாடம் அவர்களின் சமூக மயமாக்கல் பயணத்தில் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

இந்தப் பாடத்திட்டம் மாணவர்களுக்கு வெறும் புத்தக அறிவை மட்டும் போதிப்பதில்லை. மாறாக, வாழ்க்கையின் நடைமுறைச் சவால்களை எதிர்கொள்ளவும், பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் கற்றுக்கொடுக்கிறது. குழுவாக இணைந்து செயல்படுதல், ஒருவருக்கொருவர் மதித்தல், கருத்து வேறுபாடுகளை ஆரோக்கியமான முறையில் கையாளுதல் போன்ற சமூக திறன்கள் இங்கு வளர்க்கப்படுகின்றன.

மேலும், குடியுரிமைக் கல்வி என்ற அம்சம், மாணவர்கள் தங்கள் நாட்டின் சட்டதிட்டங்கள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது. ஒரு பொறுப்புள்ள குடிமகனாக சமூகத்தில் எவ்வாறு பங்களிப்பது, பொதுநலனில் அக்கறை கொள்வது, ஜனநாயக விழுமியங்களை மதிப்பது போன்றவற்றை அவர்கள் இளம் வயதிலேயே கற்றுக்கொள்கிறார்கள். இதன் மூலம், எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தைக் கட்டமைக்கக்கூடிய குடிமக்களை உருவாக்குவதில் இந்த பாடம் முக்கிய பங்கு வகிக்கிறது.

இலங்கைப் பாடசாலைகளில் இந்த பாடத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவம் கவனிக்கத்தக்கது. பல்லின கலாச்சாரம் கொண்ட நமது நாட்டில், சமூக நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் பேண வேண்டியது அவசியம். 'வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்' என்ற பாடம் மாணவர்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வையும் மரியாதையையும் வளர்ப்பதன் மூலம் இதற்கு உதவுகிறது.

ஒட்டுமொத்தமாக'வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்' என்ற பாடம் வெறும் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியல்ல அது ஒரு சமூகத்திற்கான முதலீடு. பாடசாலையின் வகுப்பறைச் சுவர்களுக்குள் விதைக்கப்படும் சமூக உணர்வு, பிற்காலத்தில் ஒரு ஆரோக்கியமான சமூகமாக விருட்சமாக வளரும். இன்றைய மாணவர்கள் நாளைய சமூகத்தின் தூண்கள்.

அவர்களுக்குள் ஒற்றுமை, பல்லுயிர்மை, பொறுப்புணர்வு போன்ற விழுமியங்களை விதைப்பதன் மூலம், நாம் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியும். இந்த பாடத்தின் மூலம் மாணவர்கள் பெறும் சமூகப் பயிற்சி, அவர்களை வெறும் தேர்ச்சி பெற்றவர்களாக மட்டுமல்லாமல், மனிதநேயம் மிக்கவர்களாகவும், சமூக அக்கறை உள்ளவர்களாகவும் மாற்றும். எனவே, பாடசாலைகளில் நிகழும் இந்த சமூக மயமாக்கல் செயல்பாடு வெறும் நிகழ்வல்ல, அது ஒரு சமூக மாற்றத்திற்கான விதை என்பதை உணர்ந்து செயல்படுவோம்.




# அன்பின் அடையாளமாய் திகழ்பவளே அன்னை

அன்னை தான் இவ்வுலகில் நமக்குக் கிடைத்த பொக்கிஷம். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" ஔவை பாட்டியார் தனது நீதி நூல்களில் ஒன்றான கொன்றை வேந்தனில் கூறியுள்ளார். இதன் பொருள் அன்னை தான் நம் முதல் கடவுள். அன்னையர்கள் பல விதமான கஷ்டங்களுக்கு இடையில் தம்மை வளர்த்து வருகிறார்கள். மேலும், பல விதமான சாதனைகளையும் படைத்து வருகிறார்கள்.

இத்தகைய போற்றுதற்குரிய அன்னையர்களைப் போற்றும் வகையில் கொண்டாடப்படும் தினமே அன்னையர் தினமாகும். அன்னையர் தினம் உலகின் பல பகுதிகளில் வெவேறு தினத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இருந்தாலும் பல நாடுகளில் மே மாதம் வரும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்னையர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

எந்த காலகட்டமாக இருந்தாலும் சரி, நாம் எத்தனை மனிதர்களைச் சந்திருந்தாலும் சரி நம் மீது அம்மாவை விட வேற யாரும் அன்பு செலுத்த முடியாது. இந்த உலகில் யாருக்கு ஏதும் செய்தாலும் அதற்கு கைமாறாக இது செய்ய வேண்டும், என்ற கருத்து இருக்கிறது. ஏன் சொல்லப்போனால் கடவுளிடம் வரம் கேட்டால் கூட நான் உனக்கு இதைச் செய்கிறேன் என் கூறி வரத்தைக் கேட்கிறோம். ஆனால், அம்மா என்பவள் எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் நம் மீது உண்மையான அன்பு செலுத்துபவள். இந்த நாளன்று உங்களுக்கு அம்மாவுக்கு வாழ்த்துக்களைக் கூறுங்கள். இந்த மேனாள் மட்டுமில்லை எந்நாளும் அம்மாவை மறந்துராதே

பெண்கள், வீட்டில் சகோதரியாக, தாரமாக, தோழியாக, பாட்டியாக இப்படி பல பாத்திரங்களில் நம்மை வழிநடத்திச் சென்றாலும், அன்னை என்ற பாத்திரமே மிக உன்னதமான பாத்திரமாகும். அன்னையினால் மட்டுமே ஒரு பிள்ளையின் அனைத்து உணர்வுகளையும், கஷ்டங்களையும் உணர முடியும்.

நாம் கருவில் இருக்கும்போதே கருவிலேயே பல சவால்களையும் எதிர்ப்புகளையும் தாண்டி இந்த சமூகத்திற்குப் பெறுமதி மிக்கவர்களாக நம்மைத் தருபவர்கள் அன்னையர்களே. எல்லா உறவுகளையும் ஒன்றிணைத்து தன்நலம் கருதாது எல்லா உறவுகளும் முக்கியம் என வாழும் பெண் தெய்வங்களே அன்னையர்கள் ஆவர்.

அமெரிக்காவில் வாழ்ந்த மரியா ஜார்விஸ் என்ற பெண்மணியின் தாயன்பின் காரணமாக அன்னையர் தினம் இன்று வரை கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த உலகில் அன்னையின் அன்பிற்கும் பண்பிற்கும் வேறெதுவும் இல்லை என்றால் அது மிகையாகாது. கருவில் இருக்கும் குழந்தை ஆணோ பெண்ணோ என அறியாத போதிலும் தன் குழந்தையைப் பத்திரமாய் சுமந்து உலகின் அழகைப் பார்க்க வைக்கும் உன்னத உறவு தான் அன்னை தான். இவ்வுலகில் அன்னையைத் தவிர, வேறு யாராலும் அதீத அன்பைக் கொடுத்து விட முடியாது. அன்பின் அடையாளமாய் திகழ்பவளே அன்னை.

மகனாக இருந்தாலும் சரி, மகளாக இருந்தாலும் சரி நமக்கு என்ன வேண்டும் என்று நாம் சொல்லாமலே அறிந்து கொள்பவள் தாய் மட்டுமே. நமது உடம்பிற்கு இவை ஒத்துக்காது, இவை ஒத்துக்கும் என்று தெரிந்து கொள்பவளும் அன்னை மட்டுமே. நாம் மழையில் சொட்டச் சொட்ட நனைந்து வீடு திரும்பும்பொழுது, வாசலிலேயே துண்டுடன் நின்று, அப்பவே குடை எடுத்துவிட்டுப் போகச் சொன்னேன், கேட்டியா" எனத் திட்டுவதும் தாய்தான். நமக்கு அடிபட்டால் நாம் துடிக்கும் வலியை விட அவள் துடிக்கும் வலி தான் அதிகமானது.

இந்த சமூகத்தில் தான் பெற்ற பிள்ளைகள் பண்புடனும், பணிவுடனும், நற்பழக்க வழக்கங்களுடனும் வளர்ந்து வாழ்வில் உயர்ந்த இடத்திற்கு வரவேண்டும் என்பதே ஒவ்வொரு அன்னையரின் மிகப்பெரிய ஆசை ஆகும். அதனை நிறைவேற்றி அன்னையரை மகிழ்விப்பது நம் ஒவ்வொருவருடைய கடமை ஆகும். முக்கியமாக. எம்மைப் பாராட்டி, சீராட்டி வளர்த்த அன்னைக்கு நாம் என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் என பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்தில் உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாள். இத்திருக்குறளிற்கு ஏற்ப நாம் கல்வி கற்று வாழ்வில் முன்னேறி அன்னைக்குப் பெருமை சேர்க்க வேண்டும். மேலும், நம்மைப் பெற்றெடுத்த தாயை அன்னையர் தினத்தில் மட்டுமல்லாது என்றென்றும் போற்றி வணங்க வேண்டும்.

இந்த நாளில் மட்டுமே அன்னையைப் போற்றி வணங்காமல் எந்நாளும் போற்ற வேண்டும். இவ்வுலகைப் பொறுத்தவரை எல்லாருக்கும் நீ என் தாய், ஆனால், என் உலகமே நீதான் என்று யாருக்கும் தெரியாது.

இந்த உலகத்தைக் கடவுள் படைத்தாலும், இயற்கையே படைத்தாலும் கூட அகில உலகினையும் ஆட்டிப் படைக்கும் அறிவுள்ள மனிதர்களைப் படைப்பது அன்னை. அன்னையர்கள் தான் நாம் கண்ணால் காணும் தெய்வ ரூபங்களாக இருக்கின்றனர்.

"அதனால் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என அவ்வையார் பாட்டி தனது தமிழ் நீதி நூல்களில் ஒன்றான கொன்றை வேந்தனின் அர்த்தம் பொருந்தி நமக்கு உரைத்திட எழுதி வைத்துள்ளார் போலும்.

எத்தனையோ, வெளியுலகச் சவால்களை ஆண்கள் எதிர்கொண்டுள்ள போதிலும், கருவிலேயே பல எதிர்ப்புகளைத் தாண்டி இந்தச் சமூகத்தில் பெருமதிப்புடன் திகழ்ந்து, அன்றாடம் குடும்பத்தையும், குழந்தைகளையும், உறவினர்களையும், வேலையும், அக்கம்பக்கத்து வீட்டாரையும் பரிபக்குவத்துடன் அணுகி, வீட்டுக்குள்ளும் வெளியிலும் பலவித சவால்களைச் சந்தித்து அதை அனுசிரத்தையும் மேற்கொண்டு சாதனை படைத்துவருபவர் தான் அன்னை.

வீட்டில் உள்ளவர்களின் உடல் நலத்துக்குச் சொத்தைக் கத்திரிக்காயை நீக்கிவிட்டு நல்லவற்றைக் கூட்டிச் சேர்த்துச் சமைத்துப் பரிமாறிட மெனக்கெடுவது முதல் இந்தச் சமூகத்தில் தம் குழந்தைகளையும், கணவனையும் பொறுப்புள்ள குடிமகனாகக் கட்டமைப்பது வரை எதிலும் ஒரு முக்கிய பங்காற்றி வரும் ஒவ்வொரு நாட்டுத் தேசத் தாயின் அருந்தலைப் புதல்விகள்தான் அன்னையர்.

ஒவ்வொரு அன்னையர்களின் கைகளில் தான் ஒரு நாட்டின் எதிர்காலத்தைச் சிருஷ்டித்துக் கட்டமைக்கும் மாணவத் தூண்கள் எல்லாம் செதுக்கப்படுகிறது.

அன்னையின் வயிற்றில் கருவானதிலிருந்து இந்த உலகத்தையும் உலக நடப்புகளையும் கவனிக்கத் தொடங்கும் குழந்தை அவளது வளர்ப்பிலும் அவளது பண்பைப் போன்ற வார்ப்பிலும் தான் இந்தச் சமூகத்தில் ஒருவனாகவும், மக்களின் பிரதிநிதியாகவும், மக்களால் மக்களுக்காக மக்களே ஆளும் மாபெரும் தலைவனாகவும் உருவெடுக்கிறான்.

அன்னையின் கைகளில் ஒரு களிமண் இருந்தாலும், அது விலையேறப்பட்ட கலை நயப் பொருளே ஆகும் எனில், ஒரு குழந்தையை அவள் எப்படி வளர்ப்பாள் என்பதற்கு நாமெல்லாம் சான்று.

இந்த உலகமே அன்னையின் காலடியில் தவம் கிடந்தாலும் அவளது கண்ணும் கருத்துமான கொள்கைகள் எல்லாம் மனித சமுதாயத்திற்குத் தேவையான பொறுப்புள்ள ஆளுமைகளாகத் தனது குழந்தைகளை உருவாக்க வேண்டு என்றே சிந்தனை செய்வாள்.

அதனால், பெண்களின் தனித்தன்மை இனிமேலும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும். அது மானிடத்தை உயர்த்தும் திறவுகோல் ஆகும்.

எத்தனை பிரச்சினைகள் வேண்டுமானாலும் எதிர்கொண்டு வரட்டும், தனது பிரசவ வலிகளையே தன்னம்பிக்கையும் அதிக ஆற்றலுடன் தாங்கியவளுக்கு அதெல்லாம் ஒரு சொற்பம் தான். அந்தத் தாயிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள எத்தனை உண்டு தெரியுமா ?

'அலுப்பில்லாமல் நிமிடம் தோறும் உழை! ஆகாசத்தை போல் நாளும் அறிவை விரிவாக்கிடு, சுமைகளைக் கண்டு சுருண்டு படுக்கையில் படுத்துக்கொள்ளாதே சுமை வந்தால் தான் நீ அதை வெல்கிறாயா இல்லை அது உன்னை வெல்கிறாயா என்பதற்கான ஒரு முடிவு தெரியும். காலம் முழுவதும் உழைத்துக் கொண்டே இருந்தாலும் கூட கொண்ட கொள்கைகளிலிருந்தும் தனக்கு உண்டான கடமைகளிலிருந்தும் அணுவளவும் விலகிச் செல்லக்கூடாது.

சூரியனே எதிர்த்து படை திரட்டி நம்மேல் போர்தொடுக்க வந்தாலும் அதற்கு அதிர்ந்து போய் நிற்காமல் நம்மை நிதானப் புத்தியுடன் துணிந்து நின்று அதை எதிர்கொள்ளும் தைரியத்தை நெஞ்சில் விதைத்து உனது வல்லமையால் அதை வென்று முடி! துக்கம் என்பது இலைகள் உதிர்வு போல, அதை நீ விரும்பாவிட்டாலும் உன் மனக் கிளையில் மீண்டு முளைத்து உன்னைப் பற்றித் தொங்கிக்கொண்டு உன் உறுதியைக் கண்டு கடைசியில் அது தானாகவே உதிர்ந்து விடும். வையத்தில் வாழ்வது ஒரு வாழ்க்கை அது உண்மையும் உத்தமுமாய் வாழ்ந்து இந்த வாழ்க்கையைப் பயனுள்ளதாக நிறைவு செய்! ஊக்கத்தின் சக்தி என்பது உள்ளமே அதை நாம் மகிழ்ச்சி என்றால் மகிழ்ச்சியும், துக்கம் என்றால் துக்கமும் நம்மை வந்து அடையும்! ஆனால், ஒருபோதும் பிரச்சினைகள் எனும் பூதத்தைக் கண்டு பயப்படாதே... எந்தக் காலத்திலும் எதையும் வெல்லும் மனோதிடம் உனக்கு உண்டு" என்று அவளது அனுபவ மொழிகள் நமக்கு அனுதினமும் எச்சரித்து அசரீரி போல மனதில் சமிக்ஞை கொடுத்து மூளைக்கு ஒரு ஆலோசனை சொல்லிக்கொண்டே உள்ளது.

அன்னையில் பாதம் தொட்டு அவளது வார்த்தைகளை உள்வாங்கி, அவள் சென்ற பாதையிலே நாமும் செல்வோம். அன்னையை வாழ்த்தி வணங்கியபடி. ஏனென்றால், அவள் ஒட்டுமொத்த அறிவுலகத்தின் ஒவ்வொரு மனிதனின் முதல் அனுபவப் பேராசிரியை அன்னை என்பதனால்தான்.



# "போர்ச் சூழல்கள் தணிய வேண்டும்"

எரிந்து கொண்டிருக்கும் போர்ச் சூழல்கள் தணிந்து, உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழும் சூழல் உருவாக வேண்டும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, 2569/2025 ஸ்ரீ புத்த வருட வெசாக் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், புத்த பெருமானின் பிறப்பு, ஞானம் பெறுதல் மற்றும் பரிநிர்வாணம் ஆகிய முப்பெரும் நிகழ்வுகளை நினைவுகூர்ந்து, பௌத்த தத்துவத்திற்கு முன்னுரிமை அளித்து புத்த பெருமானை வழிபட இலங்கையின் பௌத்த மக்கள் ஒன்றுகூடும் இந்த வெசாக் காலத்தில், நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் வெசாக் வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையர்களாகிய எமது வாழ்க்கை பண்டைய காலங்களிலிருந்தே பௌத்த தத்துவத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. அது புத்த சமயத்திலிருந்து எமக்குக் கிடைத்த பரிசு. எமது நாட்டில், பல்வேறு இனங்கள், பல்வேறு சமயங்களைப் பின்பற்றி, நல்லிணக்கத்துடனும் சகவாழ்வுடனும் வாழ்ந்து வருவதுடன், அனைவரும் ஒன்றுசேர்ந்து வெசாக் பண்டிகை போன்ற ஒரு முக்கியமான சமயப் பண்டிகையைக் கொண்டாடுவது அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"வளமான நாடு, அழகான வாழ்க்கை" என்ற கருப்பொருளின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ள எமது அரசாங்கத்தின் கீழ் இது முதலாவது வெசாக் பண்டிகையாகும். எமது நாடு சரியான மாற்றத்தை நோக்கிப் பயணித்து வரும் இச்சந்தர்ப்பத்தில், மனித உள்ளங்களை ஆற்றுப்படுத்த இந்த வெசாக் காலம் மிகவும் பொருத்தமானது என்பது எனது நம்பிக்கையாகும். அந்த நோக்கத்திற்காக நாம் அனைவரும் ஒருமனதுடனும் ஒற்றுமையாகவும் கைகோர்ப்போம் என எனது இந்த வெசாக் செய்தியின் ஊடாக உங்கள் அனைவரையும் அழைக்க இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

இந்த வெசாக் பண்டிகைக் காலத்தில், உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளில் தற்போது எரிந்து கொண்டிருக்கும் போர்ச் சூழல்கள் தணிந்து, உலகெங்கிலும் உள்ள அனைத்து மக்களும் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழும் சூழல் உருவாக வேண்டும் என்று அனைத்து இலங்கையர்களுடனும் சேர்ந்து நான் பிரார்த்தனை செய்கிறேன் என்றும் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



# "அனைத்து இதயங்களையும் ஒளிரச் செய்வோம்"

தர்மத்தின் ஞானத்தால் அனைத்து இதயங்களையும் ஒளிரச் செய்யும் புனித வெசாக் தினமாக அமையட்டும் என்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தனது வெசாக் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், புத்த பெருமானின் பிறப்பு, ஞானம் மற்றும் பரிநிர்வாணம் ஆகியவற்றை நினைவுகூரும் வெசாக் பௌர்ணமி தினம், உலகெங்கிலும் உள்ள பௌத்தர்களுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த நாளாகும்.

புத்த பெருமான், தர்மங்கள் அனைத்தையும் நிறைவேற்றி, ஞானத்தை வளர்த்து, நான்கு உன்னத உண்மைகளைப் புரிந்துகொண்டு, அனைத்து பாவங்களையும் அழித்து உண்மையான ஞானம் பெற்றது, இந்த புனித வெசாக் தினத்தில் ஆகும்.

அவர் அனைத்து துன்பங்களையும் தாங்கி, ஆயுள் முழுவதும் தன்னலமற்ற பக்தி செயல்கள் மூலம் புரிந்து கொள்ளப்பட்ட தர்மம், உலகில் வசிக்கும் அனைத்து மக்களின் ஆன்மீக நல்வாழ்விற்கும் ஒரு காரணியாக அமைந்துள்ளது. மதச் சூழலுக்குள் மனிதனின் ஆன்மீக வளர்ச்சியை வளர்ப்பதே புத்த பெருமானின் முக்கிய செய்தியாகும். மேலும், ஒரு ஆட்சியாளர் நல்ல ஆட்சியை எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதையும் பௌத்த தத்துவம் குறிப்பிடுகிறது.

"சப்பங் ரத்தங் சுகங் சேதி - ராஜாசே ஹோதி தம்மிகோ" ஒரு நாட்டின் முதல் குடிமகனாகிய ஆட்சியாளர் நேர்மையானவராக இருந்தால், மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள் என்று புத்த பெருமான் உபதேசித்துள்ளார்.

புத்தரின் போதனைகளின் பாதையை முன்மாதிரியாகக் கொண்டு,பொதுநலத்தில் சமத்துவம் மற்றும் சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சியடைந்த நாட்டை உருவாக்கி "வளமான நாடு - அழகான வாழ்க்கை" பற்றிய இந்நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக நாம் இன்னும் உறுதியாகவும் தைரியத்துடனும் ஒன்றிணைந்து செயற்படுமாறு இந்த புனிதமான வெசாக் தினத்தில் அனைவருக்கும் நான் அழைப்பு விடுக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# "பௌத்த போதனைகள் நமக்கு விடிவெள்ளி"

உலகில் மிகவும் பழைமைவாய்ந்த மத மெய்யியல்களில் ஒன்றான பௌத்த தருமத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தக் கௌதம புத்த பெருமானின் வாழ்க்கையை நினைவுகூரும் வெசாக் பௌர்ணமி தினம் இன்றாகும். இது சர்வதேச ரீதியில் மாத்திரமன்றி, எமது நாட்டின் சமூக கலாசாரத்தின் அடிநாதமாக பௌத்த மதத்தின் தாக்கங்கள் காணப்படுவதால் முக்கிய மத மற்றும் கலாசார தினமான இன்று இலங்கையர்களாகிய எமக்கும் சிறப்பான நாளாகும் என்று சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன தனது வெசாக்தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், கி.மு. ஆறாம் நூற்றாண்டில் அப்போதிருந்த தம்பதீப பீடபூமியில் சமூக ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்ட சமூகப் பிரிவுகளில் வர்க்க மற்றும் சாதி வேறுபாடுகளை ஒதுக்கிவைத்து நல்லிணக்கம், அஹிம்சை மற்றும் சமத்துவத்திற்கான சமூக விடுதலையைத் தேடிச் செல்லும் பாதையை ஆன்மீக ரீதியாக அவர் தனது போதனைகள் மூலம் உலகிற்கு எடுத்துக் கூறினார்.

தற்பொழுது காணப்படும் சிக்கல் நிறைந்த சமூகச் சூழலில் உள்ள பல நெருக்கடிகளுக்கு பயனுள்ள தீர்வுகளைக் கண்டறிவதற்கான வழிகள் புத்த பெருமானின் போதனைகளில் புதைந்துள்ளன என்பதை நான் உறுதியாக நம்புகின்றேன். இருந்த போதிலும் இன்று எமது சிக்கலான சமூக வாழ்க்கையால் உருவாகியுள்ள சூழ்நிலைகள் காரணமாக புத்த பெருமான் போதித்த நீதியான ஆன்மீகப் பாதைகள் மற்றும் அந்த இலட்சியப் பாதையை அடைவதற்கான வழிகள் தடுக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமைகள் காரணமாக பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் கூட பௌத்த மதத்தினால் வளர்க்கப்பட்ட வாழ்க்கையை வாழ்வதற்குப் பல தடைகள் உருவாகியுள்ளன. எனவே, இதற்குப் பொருத்தமான சமூக, அரசியல் மற்றும் சிறந்த கலாசாரச் சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது என நாம் நம்புகின்றோம்.

எனவே, பௌத்த போதனைகளினால் வரையறுக்கப்பட்ட மிகவும் பொருத்தமான, விடுதலை மிக்க மற்றும் சமத்துவம் கொண்ட சமூகங்களை எமது நாட்டில் உருவாக்குவதற்குப் பௌத்த போதனைகள் நமக்கு விடிவெள்ளியாக அமையும். எனவே, சமூகம் என்ற ரீதியில் கௌதம புத்த பெருமான் போதித்த ஆன்மீக விடுதலை மற்றும் சமூக விடுதலையை நாம் அடைவதற்கான வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என பிரார்த்தனை செய்வதுடன், இன்றையதினம் வெசாக் தினத்தைக் கொண்டாடும் இலங்கை பௌத்த மக்களுக்கு எனது வாழ்த்து க்களைத் தெரிவித்துக் கொள்கின் றேன் என்றார்.



# மீண்டும் ஆரம்பமாகும் ஐ.பி.எல்.



இந்தியா, பாகிஸ்தானுக்கிடையேயான யுத்த நிறுத்த அறிவிப்பையடுத்து, இந்தியன் பிரீமியர் லீக்கை (ஐ.பி.எல்.) மீள ஆரம்பிப்பதற்கான நகர்வுகளை எடுக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், சகல அணிகளும் வெளிநாட்டு வீரர்கள், பயிற்சியாளர்களை மீள இந்தியாவுக்கு அழைக்க முயல்கின்றன.

இந்திய அரசாங்கம் அனுமதியளித்தால் எதிர்வரும் வியாழக்கிழமை (15) அளவில் ஐ.பி.எல் ஆரம்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா, பாகிஸ்தானிடையேயான எல்லை தாண்டிய பதற்றங்களையடுத்து ஐ.பி.எல்லை ஒரு வாரத்துக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெள்ளிக்கிழமை (09) அன்று இடைநிறுத்தியிருந்தது.

பல அணிகளின் வெளிநாட்டு வீரர்கள் வெள்ளிக்கிழமையும் (09), சனிக்கிழமையும் (10) இந்தியாவை விட்டு வெளியேறியிருந்தனர்.

இன்னும் 12 லீக் போட்டிகளிலும், நான்கு தகுதிகாண் போட்டிகளும் எஞ்சியிருக்கின்றன.

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சிற்றி–செளதாம்டன் போட்டி சமநிலையில்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செளதாம்டனின் மைதானத்தில் சனிக்கிழமை (10) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி சமப்படுத்தியது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 82 புள்ளிகளுடன் சம்பியனாகியுள்ள லிவர்பூல் முதலாமிடத்தில் காணப்படுகின்றது. 67 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் ஆர்சனலும், 65 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் சிற்றியும், 63 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன. செல்சி, அஸ்தன் வில்லாவும் 63 புள்ளிகளுடன் காணப்படுகின்றபோதும் கோலெண்ணிக்கை வித்தியாசத்தால் ஐந்தாம், ஆறாமிடங்களில் காணப்படுகின்றன. இதில் சிற்றியும், வில்லாவும் மற்றைய அணிகளை விட ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளன.

### இத்தாலிய சீரி ஏ தொடர்:

## ஜுவென்டஸ் - லேஸியோ போட்டி சமநிலையில்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், லேஸியோவின் மைதானத்தில் சனிக்கிழமை (10) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை றன்டல் கொலோ முவானி பெற்றதோடு, லேஸியோ சார்பாகப் பெறப்பட்ட கோலை மதியாஸ் வெசினோ பெற்றிருந்தார்.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 77 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 74 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலனும், 68 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லாண்டாவும், 64 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஜுவென்டஸும் காணப்படுகின்றன. லேஸியோவும் 64 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் ஜுவென்டஸுடனான போட்டி முடிவுகளின் அடிப்படையில் ஐந்தாமிடத்தில் காணப்படுகின்றது. இதில் நாப்போலி, இன்டர், அத்லாண்டா ஆகியன ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளன.

### ஜேர்மனிய கால்பந்தாட்ட தொடர்:

## மொச்சென்கிளெட்பாவை வென்றது மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை(10) நடைபெற்ற பொரூசியா மொச்சென்கிளெட்பாவுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் சம்பியனாகியுள்ள பயேர்ண் மியூனிச் வென்றது.

மியூனிச் சார்பாக் ஹரி கேன், மைக்கல் ஒலிஸே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## சகலரையும் தாமாகே ஆட்டமிழக்கச் செய்த ஐ.அ.அமீரகம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் பெண்களுக்கான இருபதுக்கு-20 உலகக் கிண்ண ஆசியப் பிராந்திய கட்டாருக்கு எதிரான தகுதிகாண் போட்டியில் தமது சகல வீராங்கனைகளையும் தாமாகவே ஐக்கிய அரபு அமீரகம் ஆட்டமிழக்கச் செய்திருந்தது.

தாய்லாந்தில் சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐ.அ. அமீரகம் 16 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 192 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மழைத் தூறல் ஆரம்பித்த நிலையில், தமது சகல வீராங்கனைகளையும் அத்துடன் அவ்வணி ஆட்டமிழக்கச் செய்திருந்தது.

அந்தவகையில், போட்டியொன்றில் இரண்டுக்கு மேற்பட்டோர் இவ்வாறு ஆட்டமிழக்கச் செய்ததாக இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்நிலையில், 193 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கட்டார் 11.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 29 ஓட்டங்களையே பெற்று 163 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்தியா

### சிந்து நதி நீர் ஒப்பந்தம்


## இரத்து நீடிக்கிறது

தாக்குதலை நிறுத்திய இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் முக்கியமானதான சிந்து நதிநீர் ஒப்பந்தம் இரத்து என்ற முடிவை திரும்பப்பெறவில்லை.

இது குறித்து இந்தியா தரப்பில் கூறியதாவது,

“பயங்கரவாதத்திற்கு முடிவுகட்டுவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது. ஏப்ரல் 23ஆம் திகதியன்று பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா அறிவித்த நடவடிக்கைகள் அமுலில் இருக்கும்” என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


இதன் மூலம், அட்டாரி-வாகா எல்லை மூடல், பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம், சிந்து நதிநீர் ஒப்பந்தம் இரத்து உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் மாற்றம் இல்லை என்று தெரியவந்துள்ளது.



காஷ்மீர்

### காஷ்மீருக்கு

## அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைக்கும்



இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தம் அறிவித்துள்ள நிலையில், தற்போது ஜம்மு-காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. இந்த நிலையில், ஜம்மு-காஷ்மீரில் அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்கும் என்று அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக காஷ்மீரின் உணவு மற்றும் குடிமைப் பொருட்கள் வினியோகம் மற்றும் நுகர்வோர் விவகாரத் துறை மந்திரி சதீஷ் ஷர்மா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“இந்தியா - பாகிஸ்தான் மோதலை தொடர்ந்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. உணவு தானியங்கள், பெட்ரோலியம் உள்ளிட்ட எரிபொருட்கள், சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் எவ்வித தட்டுப்பாடும் இன்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

“எல்லா விநியோக முனையங்களிலும் தேவையான அளவில் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. அவ்வப்போதைய நிலைமையைக் கண்காணித்து, தடையற்ற வினியோகம் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. எனவே மக்கள் அமைதி மற்றும் விழிப்புடன் இருக்க வேண்டும். வதந்திகளை நம்ப வேண்டாம்” என குறிப்பிடப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலம்

### மராட்டிய மாநிலத்தில்

## பட்டாசு வெடிக்கத் தடை




மராட்டிய மாநிலம் பிரஹன் மும்பை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், பட்டாசுகள் மற்றும் ரொக்கெட்டுகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, இந்திய இராணுவம் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள 9 பயங்கரவாத முகாம்களைத் தாக்கி அழித்தது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நிலவியது.

இதனையடுத்து பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டு இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தப்படுவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தார். இதனை இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரியும், பாக். துணை பிரதமரும் உறுதிப்படுத்தினர். இரு நாட்டுத் தலைவர்களின் அறிவிப்புகளைத் தொடர்ந்து கடந்த 4 நாட்களாக நீடித்து வந்த தாக்குதல் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில் மராட்டிய மாநிலம் பிரஹன் மும்பை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பட்டாசுகள் மற்றும் ரொக்கெட்டுகளைப் பயன்படுத்துவதற்கு மும்பை பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

அந்த உத்தரவின்படி, மே 11ஆம் திகதி முதல் ஜூன் 9ஆம் திகதி வரை எந்தவொரு நபரும் பிரஹன் மும்பை எல்லைக்குட்பட்ட எந்த இடத்திலும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சூடான்



## சிறைச்சாலை மீது தாக்குதல்

சூடான் நாட்டில் வடக்கு கோர்டோபேன் மாகாணத்திற்கு உட்பட்ட ஒபெய்த் நகரில் உள்ள முக்கிய சிறைச்சாலை மீது அந்நாட்டுத் துணை இராணுவத்தின் அதிரடி ஆதரவு படையினர் ட்ரோன் (ஆளில்லா விமானம்) கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில், சிறை கைதிகள் 20 பேர் பலியாகி உள்ளனர். 50 பேர் காயமடைந்துள்ளனர்.

காஷ்மீர்

## ‘மத்தியஸ்தம் செய்ய தயார்’



காஷ்மீர் விவகாரத்தில் மத்தியஸ்தம் செய்யத் தயார் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க பரிந்துரையில் போர் நிறுத்தம் செய்யப்பட்டதற்கு நன்றி எனவும் கூறியுள்ள ட்ரம்ப், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் சக்தி வாய்ந்த தலைமைகளை நினைத்துப் பெருமைப்படுகிறேன் எனவும் கூறியுள்ளார்.

மேலும்,இந்தியா, பாகிஸ்தானுடன் வர்த்தகத்தைக் கணிசமாக அதிகரிக்கப் போவதாகவும், ட்ரம்ப் கூறியுள்ளார்.

முன்னதாக இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 4 நாட்களாக நீடித்த போர் பதற்றம், ஞாயிற்றுக்கிழமை(10) மாலை முடிவுக்கு வந்தது. இருநாடுகளும் சண்டை நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டன. இந்தியா, பாகிஸ்தான் இது பற்றி அறிவிப்பதற்கு முன்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

இத்தகைய சூழலில்தான், காஷ்மீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக உள்ளதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினையில் வெளிநாடுகள் தலையிடுவதை ஒருபோதும் ஏற்க முடியாது என்று இந்தியா கூறி வரும் நிலையில், ட்ரம்பின் இத்தகைய பதிவு பரபரப்பைக் கிளப்பியுள்ளது.

பங்களாதேஷ்

## ‘அவாமி’க்கு தடை



பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா கட்சியான அவாமி கட்சியின் மாணவர் அமைப்புக்கு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது. பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டதாக அவாமி கட்சியின் மாணவர் அமைப்பான பங்களாதேஷ் ஷஸ்ரா லீகிற்கு தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், ஷேக் ஹசீனாவின் அவாமி கட்சிக்கு தற்போதைய முகமது யூனிஸ் தலைமையிலான பங்களாதேஷ் அரசு தடை விதித்துள்ளது.

அவாமி கட்சி, பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகக் குற்றஞ்சாட்டியே, பங்களாதேஷ் அரசு அந்த கட்சியைத் தடை விதித்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 12, மே 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.